விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 30 சனிக்கிழமை (13.04.2002) தொலைபேசி 3378 ஒலி 115

தனலிஸ் ரெக்ஸ்

சுப முகூர்த்தப் பட்டு சேட்டிங், சூட்டிங், றெடி மேட் ஆடைக ளுக்கு கைராசி யான ஸ்தாபனம்.
நவாலி றோட், ஆனைக்கோட்டை
T.P:- 021-2955

## சயனைட் குப்பி- வோக்கிடோக்கியுடன்

# விடுதலைப் புலிகள் தீவகம் செல்ல கடற்படையினர் அனுமதி மறுப்பு

## ஒப்பந்தத்தை மீறும் செயலென விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

**தீவகத்தின் மண்டைதீவு- அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளை பார்வையிடுவதற்காக நேற்று அங்கு சென்ற விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை அப் பகுதிக்குச் செல்ல விடாது அங்குள்ள கடற்படையினர் தடுத்து நிறுத்தினர் இதனால் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தீவகத்திற்குச் செல்ல முடியாது மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினர்.**

நேற்றைய தினம் காலை 9.30 மணியளவில் 18பேர் கொண்ட விடுதலைப் புலிப் போராளிகள் குழு தீவகத்தில் தமது அரசியல் செயற்பாடுகளுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டைதீவு- அல்லைப்பிட்டி ஆகிய இடங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்ற போது சயனைட் குப்பியும், வோக்கிடோக்கியும் இல்லாமல் தீவகத்திற்குச் செல்லமுடியும் என்றும், குப்பியும் வோக்கிடோக்கியும் எடுத்துச் செல்வதை அனுமதிக்க வேண்டாம் என தமக்கு யாழ் மாவட்டக் கடற்படைத்தளபதி விஜயசேகர உத்தரவிட்டுள்ளதாக, மண்டைதீவுக் கடற்படை அதிகாரி வனிசந்தா அல்லைப்பிட்டி கடற்படை அதிகாரி பெர்னாண்டோ ஆகியோர் விடுதலைப் புலி உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

இதற்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் குப்பியுடனும் வோக்கிடோக்கியுடனும் நடமாடுவதற்கு அனுமதி உண்டெனவும் அவற்றை விட்டுவிட்டு தம்மால் செல்ல முடியாது எனவும் வலியுறுத்திக் கூறினர். இதனை அடுத்து நீண்ட நேரம் படையினரின் அனுமதிக்காக பண்ணைப்பகுதியில் காத்து நின்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் 18பேரும் தீவகம் செல்ல முடியாது

(10ம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனைக் கைது செய்ய சட்டசபையில் தீர்மானம்

### தமிழக முதல்வர் ஜெயா அறிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைப் பிரபாகரனை கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டு வந்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ் நாடு சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வர முடிவு செய்திருப்பதாக தமிழக முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா சட்ட சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜெயலலிதா சட்ட சபையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை கைது செய்து

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் நேற்று மட்டு சென்றனர் மலர் தூவி மக்கள் வரவேற்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அரசியல்ப் பணிகளில் ஈடுபடுவதற்காக பட்டிருப்புப் பாலம் சோதனைச் சாவடியூடாக 11 விடுதலைப் புலி உறுப்பினர்கள் நேற்று மட்டக்களப்பு நகருக்குச் சென்றனர்.

மட்டக்களப்பு நகருக்குச் சென்ற விடுதலைப் புலிகளை பட்டிருப்புச் சந்தியில் திரண்டிருந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் ஆரவாரம் செய்து மலர்களைத் தூவி புலிப் போராளிகளை வரவேற்றனர்.

முன்னதாக மட்டக்களப்பிற்கு வருகை தந்த 13 விடுதலைப் புலி உறுப்பினர்களில் 11 பேரை மட்டுமே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அனுமதிக்க

(10ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் அறிக்கை ஒன்றினை நேற்று வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நோர்வே அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளிற்கு விடுதலைப் புலிகள் ஆதரவு தருவது மகிழ்ச்சிக்குரியது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் திட்டவட்டமாக வன்முறைகளைக் கைவிட வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தினை கைவிடுவதனையே அமெரிக்கா விரும்புகிறது என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளை தாய்லாந்தில் ஆரம்பிப்பது தொடர்பான இறுதிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன் நோர்வேயிலிருந்து இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னதாக

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்பிகள் நேற்று வன்னி சென்றனர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் அழைப்பை ஏற்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பிகள் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பதற்கே இவர்கள் நேற்றுக் காலை வன்னிக்குச் சென்றுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ் மாவட்ட எம்பி என். ரவிராஜ் முகமாலை ஊடாக வன்னி சென்றுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கவுள்ள இக்குழுவில் ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைப் கூட்டணி பிரமுகர்களான சதாசிவம், குலதேவராசா எஸ் பத்மநாதன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். நாடாளு மன்ற உறுப்பினர்கள் வி. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், சந்திர நேரு, ரி. கிருஷ்ணபிள்ளை, செல்வம் அடைக்கலநாதன், கே.ஆர். புவனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன்,

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்- மலையக அமைச்சர்கள் தலைவர் பிரபாவைச் சந்திப்பர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலமையிலான முஸ்லிம் உயர் மட்டக் குழு இன்று சனிக்கிழமையும், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலமையில் மலையகத் தலைவர்கள் அடங்கிய குழு நாளை ஞாயிற்றுக் கிழமையும் வன்னியில் சந்தித்துப் பேச உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்பின்போது அமைச்சர் ரவூப் ஹக்கீம், வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர், பிரதி அமைச்சர் சேகுதாவுத்பஸீர், அமைச்சர் அத்தா உல்லா, எம்.தப்பீக் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தலைவர் பிரபாகரனுடனான இச்சந்திப்பின்போது முஸ்லிம் மக்களின் பொதுவான பிரச்சினைகள், வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்பன பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

(10ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு பயிற்சி நிலையம் வன்னியில் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தென்றல் புனர்வாழ்வு பயிற்சி நிலையத்தை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுத் திறந்து வைத்தார். இவ்வைபவத்தில் திருமதி அடேல் பாலசிங்கம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பொன் நித்தியானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யுத்தம் காரணமாக குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக்குடன் இந்தப் புனர்வாழ்வு நிலையம் தறந்து வைக்கப்பட்டுளளது.(வ)

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6 இல் இருந்து 11 வரையான பாடங்கள் சிறந்த ஆசிரியர்கள் மூலம் வகுப்பில் 15 மாணவர்கள் மட்டும். மாணவர்கள் பதிவுக்கு தலைமை ஆசிரியர் 426(302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4891)

## நேர்முகப் பரீட்சை நடைபெறா

(யாழ்ப்பாணம்)

திறமை அடிப்படையில் கிராம அலுவலர்களை அதி சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக இம்மாதம் 28 ஆம் திகதி கொழும்பு அமைச்சில் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை பின்போடப் பட்டுள்ளது. (உ-10)

## பொங்குதமிழ் விழிப்புணர்வு

(நெல்லியடி)

பொங்குதமிழ் தொடர்பானவிழிப்புணர்வைஏற்படுத்துவதில் வடமராட்சிப் பகுதியில்,பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (உ-247)

## இராசி பலன்

13.04.2002

(பங்குனி 30 சனி)

பிரதமை பி.இ 3.09 வரை
அச்சுவினி வை.5.53 வரை
ராகுகாலம் 9.06-10.36
நல்லநேரம் 3.06-4.36

**மேடம்**
ஜனவசியம், மனமகிழ்ச்சி, காரிய நன்மை, போசன சுகம்.

**இடபம்**
சயன சுகக்குறைவு, காரிய தாமதம், மனக்குழப்பம், வாக்குப்பலிதம்.

**மிதுனம்**
தெய்வ சிந்தை, தொழில் சிறப்பு, காரிய நன்மை, உறவினர் சந்திப்பு.

**கடகம்**
முயற்சி நிறைவேறும், நல்ல சம்பவம், உற்சாகம், செய்தொழில் நன்மை.

**சிங்கம்**
கட்டுப்படுதல், உடல் உழைப்பு, உடல் களைப்பு, முயற்சி தாமதம்.

**கன்னி**
எதிர்பாராத தொல்லை, காரிய தடங்கல், உடல் நலக் குறைவு, அபகீர்த்தி.

**துலாம்**
நல்ல உணவு கிடைத்தல், தொழில் நன்மை, கௌரவம், காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், திடீர் பயணம், முயற்சி ஜெயம்.

**தனுசு**
வியாபார நன்மை, விரும்பிய இடம் செல்வதில் தாமதம், திடீர் நன்மை, கலந்துரையாடல்.

**மகரம்**
முயற்சி கைகூடும், உடல் நலக் குறைவு, தன்னம்பிக்கைக்குறைவு, தாய்வழி உறவு.

**கும்பம்**
அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், நல்ல முயற்சி, வாக்கு பலிதம்.

**மீனம்**
மாதர் நட்பு, காரியதாமதம், நிலைக்கேடு, பொருள் விரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின்

# சமூகப் பணியும் சமயப் பணியும் என்றும் மறக்க முடியாதவை

## கலைப் பீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சைவசமயத்திற்கு தொண்டாற்றியதோடு மாத்திரம் நிற்காது அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார், மக்களுக்கும் சேவையாற்றியவர். அவரது சமூகப்பணியும் சமயப்பணியும் என்றுமே மறக்க முடியாதவை.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழககலைப்பீடாதிபதிபோராசிரியர்க கோபாலகிருஷ்ணஐயர் அண்மையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனகலா மண்டபத்தில் நடைபெற்ற அருள் ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் 5 ஆவது ஆண்டு ஆன்மீகப் பெருவிழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

சர்வதேச இந்துமத குரு பீடம் நடத்திய இவ்விழாவில் அவர்பேசுகையில்மேலும் கூறியதாவது;

இந்துமத தத்துவங்களை எல்லோரும் அறிய வேண்டும் என்றஆர்வமுள்ளவராகஅவர் சேவைசெய்தது -ன்சிவாச்சாரியர்கள் சிறந்த சமஸ்கிருத அறிவுள்ளவர்களாகவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டவர்.

அவருடையசிந்தனைகளைச் செயற்படுத்தும் வகையிலே தான் தமிழ் மக்களின் கலாசாரத்தை வளர்க்கும் ஒரு கட்டமாக உள்ளூர்கலைஞர்கள் அவரது நினைவுநாளில் கௌரவிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார். (எ-19)

# செய்தியாளரின் கேள்விக்கு புலிஉறுப்பினரின்பதில்இது

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானை அமெரிக்கப் படையினரும், வடக்கு கூட்டணியும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர், வடக்குக் கூட்டணித் தலைவர் அஹமட்ஷாமருக்கு ஏற்பட்டது போன்ற சம்பவமொன்று இங்கும் நடக்கக் கூடாது என்பதில் நாம் அவதானமாக இருக்கிறோம்.

கடந்த புதனன்று, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டுக்குச் சென்ற உள்ளூர், வெளியூர்ப் பத்திரிகையாளர்கள் துருவித் துருவிச் சோதனை செய்யப்பட்டமை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரிடம் கேட்டபோது மேற்கண்டவாறு பதிலளித்ததாக வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இச்சோதனை நடவடிக்கை குறித்து புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் வருத்தம் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## இரதோற்சவம்

அத்தியடி அருள்மிகுபிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும்,நாளை மறு தினம் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ)

## பயிற்சிப் பாசறை

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளினதும் ஏற்பாட்டில் வீதி ஒழுங்கு, முதலுதவிப் பிரிவு மாணவர்களுக்கு எதிர் வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் பயிற்சிப் பாசறை நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்விற்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமை தாங்கி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார். (உ)

## கொழும்பு- யாழ்.

# பஸ் சேவை நடத்த புலிகளுக்கு அனுமதி?

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - கொழும்பு தரைவழிப்பாதைக்கு திறந்து விடப்பட்ட ஏ-9 கண்டி வீதி வழியாக இன்னும் இரண்டு தினங்களுக்குள் தற்போது நிலவும் நடைமுறைச்சிக்கல்கள் தீர்த்துவைக்கப்படும் என புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் போது தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஏ-9 கண்டிவீதி மக்கள் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டபோது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் நேரடிப் போக்குவரத்து இன்னமும் இடம்பெறாததை அடுத்து நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளை அடுத்தும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் முறைப்பாடுகளை அடுத்தும் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளும் விரும்பினால் கொழும்பு-யாழ் பஸ்சேவையை நடத்த அனுமதிக்கலாம் என்றும், அவர்களுக்கும் பஸ் வண்டிகள் தேவையானால் அவற்றை வாடகைக்கு பெறுவதற்கோ புதிதாக கொள்வனவு செய்துகொள்வதற்கோ அரசு உதவும் என பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

# வன்செயலில் பாதிக்கப்பட்ட அனைவர்க்கும் நட்ட ஈடு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் போது இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் போதும், மார்ச் மாதம்நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களிற்கானதேர்தலின்போதும் உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டது தெரிந்ததே.

எந்தவொரு கட்சிக்காகவுமின்றி அரசியல் பேதமற்ற வகையில் இந்நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமைச்சரவைக்கு அறிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தல்வன்செயல்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதும்குறிப்பிடத்தக்கது. (உ-8)

# சில்லறைப் பணத்திற்கான தட்டுப்பாட்டை போக்க மக்கள் வங்கி முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நீண்டகாலமாக நிலவும் சில்லறைப் பணத்திற்கான தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகமக்கள்வங்கி வடவலய வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிக நிறைகாரணமாகவே தேவையான அளவு நாணயங்களை விமானம் மூலம்எடுத்து வருவதில் பல சிரமங்கள் நிலவுவதாகவும்,

புதுவருடத்தையொட்டி சில்லறைக் காசுகளையும் புதிய நோட்டுக்களையும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் மேற்படி வங்கிவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# முஸ்லிம் கைதிகள் எவரும் எம் வசம் இல்லை

## தலைவர் பிரபா தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்கள் எவரையும் கைதிகளாகப்பிடித்து வைத்திருக்கவில்லை, என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் புதனன்று கூட்டியிருந்த பத்திரிகையாளர் மாநாட்டின் போது கொழும்பிலிருந்துவெளிவரும் 'நவமணியின்' செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு வே.பிரபாகரன்தெரிவித்தார்

இதுதொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப் புலிகளிடம் தற்போது கைதிகளாக எந்தவொரு முஸ்லிம்களும்இல்லை அப்படியாராவது இருப்பதாக இருந்தால் அது தொடர்பான பட்டியல் ஒன்றை அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் கொடுக்குமாறும்அது தொடர்பாக ஆராயப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

# ஏ-9 வீதியால் விரைவில் பொருட்கள் எடுத்துச் செல்ல முடியும்

(கொழும்பு)

கண்டியாழ்ப்பாணவீதியால் பொருட்கள் எடுத்துச் செல்ல விரைவில் அனுமதிக்கப் படவுள்ளதாக அமைச்சர் ஜயலத் ஜயவர்தனா தெரிவித்துள்ளார்.

பொருட்கள் அனுப்புவது குறித்து புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் பேச்சுவார்த்தை இடம் பெறுவதாகவும், போக்குவரத்து பாதையை புனர் நிர்மாணம் செய்வதற்குதமது அமைச்சு 25 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## சென்பீற்றஸ் சென்ஹென்றிஸ் அணிகளின்

# உதைபந்தாட்டப் போட்டி

## வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்பீற்றஸ் கல்லூரி அணிக்கும் சென்ஹென்றிஸ்அணிக்குமிடையில் நேற்று இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஹென்றிஸ் அணிசிறப்பாக விளையாடியபோதும் இடைவேளைக்கு முன்னதாக சென்பீற்றஸ் அணி முதலில் கோல் போட்டது.

இதனைஅடுத்து இருஅணிகளுக்குமிடையிலான ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது ஆட்டம் முடிவடைவதற்கு நான்கு நிமிடங்கள் இருக்கையில் ஹென்றிஸ் அணியினர் கோல் ஒன்றைப் போட்டதனால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்நிகழ்வில்பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராககலந்துகொண்டார்.

யாழ் மத்தியகல்லூரி அணிக்கும் சென்பீற்றஸ் அணிக்குமிடையிலான போட்டி இன்று பி.ப4மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (த-110)

# சூரியனை விடவும் எடை கூடிய நட்சத்திரம்

## அமெ, விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

சூரியனை விட நிறைகூடிய நட்சத்திரமொன்றை அமெரிக்கவிஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு சிலகிலோ மீற்றர்நீளம் கொண்ட இந் நட்சத்திரம் நிட்திரவவாயு அல்லாதவேறு பொருளால் ஆனது என்று ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்க நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியில் இருந்து 360 ஒளி ஆண்டுகள் தொலைவில்உள்ள இந்த அதிசய நட்சத்திரம் பற்றிய ஆராய்வு உறுதிசெய்யப்பட்டால் இத்தகையபொருளால் ஆன நட்சத்திரங்களுக்கே இது முன் உதாரணமானதாகும் என்றுஅவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-7

# சிவயோக சுவாமிகளின் அருட் குருவாகிய தேரடிச் சித்தராம் செல்லப்பா சுவாமிகள்

**திருமதி தெய்வமாலினி செந்தில்குமரன்**
கொழும்புத்துறை.

செல்லப்பாசுவாமிகள் வட்டுக்கோட்டையை சேர்ந்த வல்லிபுரம் என்பாருக்கும் பொன்னார் என்ற அம்மையாருக்கும் 1860 ஆம் ஆண்டில் நல்லூரில் பிறந்தார். இவருக்கு பெற்றோரிட்ட பெயர் செல்லப்பர். இவர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கல்விகற்று ஆராய்ச்சி உத்தியோகம் புரிந்தார். எனினும் இவ்வுத்தியோகத்தில் அதிககாலம் கடமையாற்றாமல், தனது விசர் கோலத்தை காட்ட ஆரம்பித்தார். ஓடுவதும் ஆடுவதும் ஆக திரிந்தார். இதனால் பெற்றோர் கட்டிப்போட்டனர். அவ்வீதியில் நடமாடித் திரிந்த கடையிற்சுவாமிகள் கட்டிக்கிடந்த செல்லப்பரைப்பார்த்து 'முற்றிவிட்டது அவிழ்த்துவிடுங்கள்' எனக் கூறினார். பின்னர் அவிழ்த்துவிட்டதும் நல்லூர் தேரடியில் போய் அமருவார் வீதியில் போய் வருபவர்களை வாயில் வந்தபடி ஏசுவார். நல்லூரில் அர்த்தசாமப்பூசை முடிய நல்லூர் வீதியில்வந்து தன் மேல் பக்திகொண்ட அனைவருக்கும் வாழ்த்தியும், ஏசியும்விடுவார். பங்குனிதலைத் திங்கள்தோறும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனிடம் சென்று பொங்கிவிட்டு வருவார். திருநெல்வேலி சிவன் கோவிலில் அன்றிருந்த குருக்கள் அன்புடன் சுவாமிக்கு வடை, பாயாசம் என்பவற்றை பாகம்செய்துவிட்டு செல்லப்பரை நினைத்தால் செல்லப்பர் அங்குதோன்றி அமுதுசெய்வாராம். கொழும்புத்துறை ஊரைச்சேர்ந்த விதானையார் திருஞான சம்பந்தர், பாடகர் துரையப்பா என்போரும் சுவாமிக்கு தொண்டுசெய்துவாழ்ந்தனர். அதனால் செல்லப்பரை 'கொழும்புத்துறையாரின் சுவாமி' என அழைப்பதும் உண்டு. இவ்வாறு கொழும்புத்துறையாருடன் சேர்ந்து எங்கள் யோகர் சுவாமிகளும் செல்லப்பரை தரிசிக்கச்சென்றார்.

அருள்உபதேசம்

அப்பொழுது செல்லப்பர் ஆரடா நீ? என அதட்டினார் அதற்கு யோகர் சொல்கிறார் 'ஆரடா நீயென்றும் அதட்டினான் அன்றே யான் பெற்றேன் அருள்' நல்லதுவா உன்னைப்போல ஆளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன் என்கிறார். காலம் செல்லச் செல்ல யோகர்சுவாமிகளை செல்லப்பர் தனது சிறந்த சீடர் ஆக்கினார்.

'தேரடா உள்'
'தீரடா பற்று'
'பாரடாவெளியில்'

என பாடம்புகட்டினார். அத்துடன் அவர் 'ஒரு பொல்லாப்பும்இல்லை'

முழுவதும் உண்மை
எப்பவோ முடிந்தகாரியம்
நாமறியோம்

எனும் வாக்கியங்களை அடிக்கடி கூறுவார். இரு தவசிகளுக்கும் திருஞான சம்பந்தர் என்பார் வேண்டும் பணிகள்பல புரிந்துவந்தார். கதிரவேலு என்பார் மௌனியாக செல்லப்பரின் தொண்டராகத் தேரடியில் தூணோரமாகஇருந்து தவமியற்றி வந்தார். சுவாமிகளும் தேரடியின் மற்றொரு தூணோரமாகஇருந்து தவமியற்றினர். இவர்களைப்பார்த்து 'இரு யானைகளை ஒரு தறியிற் கட்டவொண்ணாது' எனக் கூறிச் செல்லப்பர் கலைந்துவிட்டார். யோகநாதர் கதிர்காம யாத்திரையாக சென்றுவிட்டார். உறவினர் செல்லப்பரிடம் யோகநாதனைப் பற்றி எங்கே எனக்கேட்க 'அவன் செத்துவிட்டான்' என்றார். பின்னர் யோகரை நோக்கி 'எங்கேனும் வேர் விராயைப்பார்' எனமொழிந்தார். குருமொழியைத் திருவாக்காகக்கொண்ட சீடர் கொழும்புத்துறை சென்று சந்தியில்இருந்த இலுப்பை மரத்தின் வேரில் அமர்ந்துகொண்டார். அங்கும் செல்லப்பர் அடிக்கடி செல்வார். ஒரு நாள் சீடரிடம்சென்ற செல்லப்பரை பார்த்து சீடர் வணங்கிட எழுந்துவிட குருவானவர்கையமர்த்தி 'நீயென நானென வேறில்லை' என்றார்.

சமாதியானார்

இறுதியாக செல்லப்பர் தம் கொட்டிலில் சுகவீனமாகக் கிடந்தபோது சுவாமி பார்க்க சென்றார். சுவாமி படலையை நெருங்கியதும் யாரடா படலையில்? நின்று பாரடா வெளியில் என்று ஒலித்தது. இதுவே செல்லப்பரின் முடிந்த முடிவாய் உரைத்த வாசகம்.

இரவு வேளையில் தம்முடன் துயிலவரும் அயலவரிடம் இன்று இரவு இங்கு பெரிய புதினம் நடக்கும் நீ வருவையோ? எனக் கூறினார். அன்றிரவு செல்லவில்லை அன்பர். அடுத்தநாட் காலையில் ஒரு விரலை வாயில் வைத்தபடியும் காலொன்றை மடக்கி நடராச பாவத்தில் வைத்த வண்ணமும் செல்லப்பரின் வேடம் விறைத்து இருந்தது. இவர் சமாதி அடைந்தநாள் 1915 ஆம் ஆண்டு பங்குனி மாதத்து அச்சுவினி ஆகும்.

இவர் சமாதியடைந்த பங்குனி அச்சுவினி நட்சத்திரத்தில் ஒவ்வொரு வருடமும் நல்லூரில் தேரடியின் முன்பாக உள்ள செல்லப்பா சுவாமிகளின் கோயிலில் அபிஷேகம் பூசைகள் மற்றும், மகேசுர பூசையும், தேரடியிலும் விசேடமாக பூசைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமிகள் இல்லாதிருப்பினும் அவரின் அன்பர்கள் அடியார்கள் யாவருக்கும் அவரது திருவருள் கிடைக்கும் என்பது திண்ணம். ●

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகமும், 24 ஆம் திகதி புதன்கிழமை திருக்குளிர்த்தி அபிஷேகமும், அன்னதானமும் நடைபெற்று, 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வைரவர் சாந்தியுடன் உற்சவம் நிறைவுபெறும்.

(செ)

## அனுமதி அட்டை வழங்கல்

(தென்மராட்சி)

அனுமதிஅட்டைபெறவேண்டிய சாவகச்சேரி சந்திர புரஸ்கந்தவரோதயம. வித்தியாலயத்தைச் சேர்ந்த அனைத்து க. பொ. த. (உ/த) வகுப்பு மாணவர்களும் இன்று மு. ப. 9 00 மணிக்கு யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரிக்கு வருகைதரவேண்டுமென்றும், இன்றைய தினம் மு. ப. 10.00மணிக்கு குறித்த பாடசாலையின் நிரந்தர ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலையைச் சொந்த இடத்திற்குக் கொண்டு செல்லுதல் தொடர்பான கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென்றும்பாடசாலை அதிபர் மு. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (உ-77)

## சுதேசிய திருநாள் விழா

(கொழும்புத்துறை)

அரியாலையில் 83 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00மணியளவில் தலைவர் பொ. நடராசாதலைமையில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கிரிக்கெட்அணியின் பயிற்றுநர், யாழ். பல்கலைக்கழக துடுப்பாட்ட இடைவரவு விரிவுரையாளருமான வி.தே. சண்முகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (உக-223

# சமாதானம் மலர்வதற்கு வாய்ப்பான காலம் நழுவவிட்டால் இலங்கைக்கு இல்லை எதிர்காலம்

## முன்னாள் அமைச்சர் றொனி டிமெல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசியமுன்னணிஅரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை குறிப்பாக நாட்டிலே நிரந்தர சமாதானத்தைநிலைநாட்டுவதற்காக மேற்கொண்டு வரும் முயற்சிகளை தான் மிகவும் வரவேற்பதாக முன்னாள் அமைச்சரும், இன்றைய பாராளுமன்ற உறுப்பினருமான றொனிடிமெல் ஏப்ரல் 7 ஆம் திகதி 'சண்டே லீடருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் மதிக்க வேண்டும்

காலங்கடந்த இன்றைய நிலையிலாவது சமாதான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச சமூகம் எம்மை மதிக்கக் கூடியஒரேயொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இல்லாவிட்டால் இலங்கைக்கு எதிர்காலமேஇல்லை என்றுதான் நான்சொல்வேன் என்றும் அவர் தனதுபேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் அரசியல் யாப்பில் செய்யவுள்ள திருத்தங்களை நான் வரவேற்கிறேன். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தத்தமது மனச்சாட்சியின்படி எந்தக் கட்சிக்காவது மாறுவதற்கு தடையற்ற உரிமை இருக்க வேண்டும் என்ற கருத்தையும் அப்பேட்டியில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அப் பேட்டியில் மேலும் சில பகுதிகள் வருமாறு

கேள்வி

முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி ஐக்கிய தேசிய முன்னணி அரசு கொண்டுவரவுள்ள அரசியல் யாப்பு திருத்தங்களை சந்திரிகா குமாரதுங்கா ஆதரிக்காவிட்டால் தான் அரசியலில் இருந்து வெளியேறப் போவதாகக் கூறியிருக்கிறார். இது அவரது வெறும் கூச்சலா அல்லது.

**சண்டே லீடர் பத்திரிகையில் வழங்கிய பேட்டி**

அவரது கருத்துக்கு ஆதரவாக பொ. ஐ.முன்னணியில் ஒரு பகுதிவளர்ந்து வருகின்றதா?

பதில்

இது எனது இனிய நண்பன் பௌசியிடம் நேரடியாகக் கேட்க வேண்டிய கேள்வி. நான் வழக்கமாக ஒரு கட்சிக்குள் எத்தகையசதிகளிலும் ஈடுபடுவதில்லைநான்ஒருகட்சியை விட்டு வெளியேற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் வெளிப்படையாகவும் நேரடியாகவும் அதைத் தெரிவித்துவிட்டு வெளியேறி விடுவேன்.

கேள்வி

1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான போது முக்கியமான பாத்திரத்தை வகித்த தாங்கள் அரசாங்கம் நாட்டின் இறைமையைப் பாதிககாது விடுதலைப்புலிகளுடன் அதிகாரப் பகிர்வு உடன்பாட்டினை அடைவதில் எவ்வளவு தூரம் முன்னே செல்லும் என்று உங்கள் நோக்கில் கருதுகிறீர்கள்.

பதில்;

நான் எப்போதுமே சமாதானத்தையே பெரிதும்விரும்புபவன் அத்துடன் எங்கேயென்றாலும் சமாதான வழிமுறைகளில் நல்லவைகளையே காண்பவன்.

சமாதானத்திற்கு இன்றைய காலகட்டம் மிகவும் அருமையான ஒரு சந்தர்ப்பமாக வாய்த்துள்ளது என்று நான் உணர்கிறேன்.

எனவே நாங்கள் தமிழ்மக்களின் குறைகளை நிவிர்த்தி செய்வதன் மூலம் சமாதானத்தை மலரச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் முஸ்லிம் மக்கள் திருப்திப்படுகிறார்களா என்பதையும் கவனிக்கவேண்டும். சமாதானம் இல்லாவிட்டால் இலங்கைக்கு எதிர்காலம் இல்லை. இலங்கை 1983 ஆம் ஆண்டில் புதியதொரு கைத்தொழில் மயநாடாக மாற வேண்டிய வாய்ப்பையும் சந்தர்ப்பத்தையும் வழிமாறிச் சென்றதால்இழந்து விட்டது. நாங்கள் பெரிய கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து விட்டோம். 1983 இல் இழந்த சந்தர்ப்பத்தை ஒருபோதும் பெறமுடியாது.

ஆனால், காலங்கடந்த இன்றைய நிலையிலாவது சமாதான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச சமூகம் எம்மை மதிக்கக்கூடிய ஒரேயொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இல்லாவிட்டால் இலங்கைக்கு எதிர்காலமே இல்லை என்றுதான் நான் சொல்வேன்.

கேள்வி:

சமாதான வழிமுறைகளுக்கு ஜே.வி.பி. யினரின் அச்சுறுத்தல் எத்தகைய பலமுள்ளதாக இருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

பதில்:

ஜே. வி. பி. குறிப்பாக இளைஞர்களைக் கவரும் வகையில் நாட்டில் வளர்ந்து வரும் ஒரு கட்சி. அவர்கள் சமாதான வழிமுறைகளுக்கு எதிராக பலமான ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கலாம். அவர்கள் அப்படிச் செய்தால் சமாதான வழிமுறைகளில் செல்ல விரும்பும்கட்சிகள் அவர்களது எதிர்ப்பு இயக்கத்திற்குச் சமனான பலம் வாய்ந்த ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும். (எ)

## தலைவர் பிரபாவின் மற்றுமோர் சாதனையே செய்தியாளர் மாநாடு

(கொழும்பு)

ஆசியாவில் இதுவரை இடம் பெற்றவற்றில் பெருமளவிலான செய்தியாளர்கள் கலந்துகொண்ட மாநாடு, கடந்த புதனன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை கூட்டிய மாநாடென வர்ணிக்கப்படுகிறது.

அத்துடன், செய்தியாளர்கள் கடுமையான முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குஉட்படுத்தப்பட்ட மாநாடும் இதுவென உலக நாட்டுப் பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உலகமே வியக்கும் வகையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்துவரும் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபா புரிந்த மற்றுமோர் சாதனை இதுவெனவும் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

கொழும்பு வைத்தியசாலை குறித்து

## மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு

(வவுனியா)


முல்லைத்தீவைச் சேர்ந்த இளம் யுவதிஒருவர்கொழும்பு வைத்தியசாலை ஒன்றின் சீர்கேடு குறித்து வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முல்லைத்தீவு விஸ்வமடுவைச் சேர்ந்த ஜானகி (வயது -25) என்பவரே இந்தமுறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இவர் கடந்த மாதம் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சத்திர சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

ஆனால் அங்கு இவருக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்கப்படாததுடன் வைத்தியசாலை நிர்வாகம் இவரைப் பொருட்படுத்தாமலேயே நடந்து கொண்டதனால் இது குறித்து அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

செ)



# தாவடி அருள் மிகு ஸ்ரீ அம்பலவாண

# சித்திரத்தேர் வெள்

# சிறப்பித

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



விநாயக அடியார்களே:-

தாவடி கொக்குவில் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் அம்பலவாண வேதவிநாயகருக்கு புதிதாக சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்ட நிகழ்ச்சி நடைபெறுவதை யிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். ஆலய விழாக்களில் தேர்த்திருவிழா முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. திருவிழா என்பது இறைவனுடைய தத்துவங்களைக் காட்டுவதாகும். தேர்த்திரு விழா என்பது அழித்தல் தொழிலாகும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மாயையைநீக்கி ஞான ஒளியை ஏற்படுத்தும் விழாவாகும். இத்தேர் என்பது மிகுந்த தத்துவத்தைக் கொண்டது. கீழே ஒடுக்கமாகவும் நடுப்பகுதி அகலமாகவும் மேல்ப்பகுதி கூர்மையாகவும் உள்ளது. மனிதனுடைய உடம்பின் அமைப்பை ஒத்தது. இறைவன் தேரில் எழுந்தருளுவதும் மனிதனு டைய இருதயத்தில் இறைவனை எழுந்தருளச் செய்வதேயாகும். அதனாலே தேரில் வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம் என்பர். மனித வாழ்க்கையை தேர்ந்து கொள்வதே தேர்த்திருவிழாவின் மகிமையாகும். நாட்டின் தலைவனை தேர்ந்தெடுப்பதே தேர்தல் என்பர். நாங்கள் எங்களைத் தேர்ந்து கொள்வதையே ஆலயங்களில் இடம்பெறும் தேர்த்திருவிழா குறிக்கின்றது. இவ்வளவு சிறப்புடைய தேரை விக்கினங்களை நீக்குகின்ற விநாயகப் பெருமானுக்கு தத்துவங்களோடு கூடிய சிற்பக் கலைஞர் திரு. அராலியூர் சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களினால் உருவாக்கப்பட்டது சிறப்புடையது. இத்திருப்பணிக்கு உதவிய அனைத்து அன்பர்களையும் வாழ்த்துகின்றோம். தேர் ஏறும் அருட்காட்சியைக் கண்டு தரிசிக்க இருக்கும் தாவடி வாழ் சைவ மக்களுக்கும் இப்பணியை முன் நின்று நடத்திய திருப்பணிச் சபையினருக்கும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து இப்பிறவியிலும் மறுபிறவியிலும் திருவருளோடு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாம் குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்.**



ஆலயத்தின் எழில் மிகு தே

## சிவத்தமிழ் அன்னையின் ஆசிச்செய்தி


*"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தம்கை"*



தாவடிப் பகுதியில் வீற்றிருந்து அருள்பாலிப்பவராக விளங்குபவர் அருள்மிகு அம்பலவாண வேதவிநாயகர். மக்களின் விக்கினங்களை அகற்றி வாழ்வளிப்பவராக விளங்கும் விக்கினேஸ்வரப் பெருமான் வழிபாடு எமது நாடு முழுவதும் பரந்து விளங்குவது கண்கூடு. நாம் எந்தக் கருமங்களையும் ஆற்றத் தொடங்கும் முன்பும் வழிபாடு இயற்றுவது இப்பிள்ளையாருக்கே. இந்தவகையில் பக்திக்குரியவராக விளங்கும் விநாயகப் பெருமான் தாவடி வாழ் மக்களால் அம்பலவாண வேதவிநாயகனாகப் போற்றப்படுகிறார். இவ்விநாயகருக்கு ஆலய அறங்காவலர் களும், இவ்வூர் மக்களும் இணைந்து தேர்த்திருப்பணியை ஆரம்பித்து தேர் வெள்ளோட்ட விழா நடாத்த இருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். சித்திரைப்புத்தாண்டோடு தேர்வெள்ளோட்டம் நடைபெற்று எம்பெருமான் தேரில் பவனி வரும் காட்சி அற்புத நிகழ்வாக அமையும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இத்திருப்பணியை ஒழுங்குபடுத்தி செவ்வனே நிறைவேற்றிய ஆலய பரிபாலனசபையினருக்கும், தேர்த்திருப்பணிச் சபையினருக்கும், திருப்பணியை நல்லபடி நிறைவேற்றிக் கொடுத்த ஸ்தபதி அவர்களுக்கும், இத்திருப்பணியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் ஆசியையும் தெரிவித்து எம்பெருமானின் திருவடிகளை வணங்கி அமைகின்றேன்.

*தலைவர்,*
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
*தெல்லிப்பழை.*

**கலாநிதி. செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி,**
**சமாதான நீதிபதி,**



ஸ்தபதி அராலியூர் சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்கள் சிற்ப வேலையில் ஈடுபட்டுள்ளார்.



தேர் நிர்மா
ஆலய பரிப
பார்வையிடு
கலைஞர் க
ருப்பதையும்

**மலரமைப்பு:ப.விஜயகுமார்**
(ஆனைக்கோட்டை செய்தியாளர்)


*விளம்பர அனுசரணை:*

# விஜய் வீடியோ



ஓடியோ புதிய, பழைய திரைப்பட CD பிரதிகள், புதிய, பழைய
விஜய் நெல்லிரசம், தலை நகைச் சோடனை, சிங்கப்
அனைத்திற்கும் நீங்கள் நாடவே


# விஜய் வீடியோ போ

கே.கே.எஸ்.வீதி, தாவடிச் சந்தி, தாவடி.

# ...லவாண வேதவிநாயகர் ஆலய

# ...ள்ளோட்ட விழா

# ...ம் 13-04-2002





...ழில் மிகு தோற்றம்

## கோவில் மகோற்சவ குருக்களின் ஆசிச் செய்தி

ஈழ வள நாட்டின் வடபால் யாழ் நகரை அண்மித்த, சைவமும் தமிழும் செழித்தோங்கும் தாவடி என்னும் புண்ணிய ஷேத்திரத்திலே விநாயகப் பெருமான் ஆனவர், ஆன்மாக்கள் மீது கொண்ட பெரும் கருணையினால் உருவத் திருமேனி கொண்டு அருள் பாலித்து வருகின்ற அம்பலவாண வேத விநாயகர் ஆலயத்திலே எம்பெருமான் தனக்கென சிற்ப வேலைப்பாடமைந்த ஓர் அழகிய திருத்தேரை உருவாக்க திருவுளம் கொண்டதை அறிந்த நிர்வாகசபையினரும், பக்த கோடிகளும் தன்னிகரில்லாத் தலைவனாம் விநாயகப் பெருமானை சிற்ப வேலைப் பாடமைந்த திருத்தேரில் எழுந்தருளச் செய்து வீதியில் பவனி வரும் காட்சியைக் காண விளைந்தனர்.

அதன் பயனாக எம்பெருமானின் திருவருளுடன் அடியார்களின் அரும் பெரும் பொருளுடனும் அயராத பக்தி சிரத்தை காரணமாக புதிய சித்திரத் தேர் உருவாகியுள்ளது.


எம்பெருமான் திருவீதியுலா வருவதற்காக முறைப்படி சிற்ப வேலைப்பாடுகள் ஒருங்கே அமையப் பெற்றதும், சகல அழகோடு விளங்குவதாகவும், பார்ப்பவர் மனதை பரவசப்படுத்தும் விதத்தில், தேவலோகத்து இரதமோ என அதிசயிக்கும் வண்ணம் இந்த அழகிய இரதத்தை விக்னேஸ்வரன் திருவருள் துணை கொண்டு சித்திரத் திருத்தேரினை சிறப்புற அமைத்த அராலியூர் சிற்பஜோதி விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் ஸ்தபதி அவர்களும் குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள்.

சித்திரைத் திங்கள் முதல் நாள் சித்திரத் தேர் தாவடித் திருவீதி தேரோடும் வீதியாகக் காட்சியளிக்கும். ஓங்கார நாதனின் மூலமந்திரத்தை ஒலித்திடும் வண்ணம் மணியோசை ஒலிக்க எம் பெருமான் உலா வருவதைக் காணும் கண்கள் பயனுள்ள கண்கள். வாழ்த்தும் வாய் பயனுள்ள வாய். வணங்கும் தலை, பிறவிப் பயனை அடைந்த தலை என்றே கூறவேண்டும். இத்தெய்வீகத் திருப்பணி இனிது நிறைவு பெற பல்வேறு வகைகளிலும் தொண்டு புரிந்த அனைவருக்கும் எம் பெருமானின் நிலையான திருவருள் என்றும் கிடைக்க வேண்டும் எனவும் அவர்கள் மென்மேலும் இதுபோன்ற திருத்தொண்டுகளில் ஈடுபட்டு பேரானந்தப் பெருவாழ்வு வாழவேண்டும் என்று வேத நாயகனாம் விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**சிவஸ்ரீ பரமசிவக்குருக்கள் சிவசங்கரக் குருக்கள்**
*அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோவில்*
*தாவடி*



...ங்கம்
...ளார்.



தேர் நிர்மாண வேலையை ஆலய குருக்கள், ஆலய பரிபாலனசபைத் தலைவர் ஆகியோர் பார்வையிடுவதையும் ஸ்தபதியும், ஏனைய கலைஞர்களும் தேர்ப்பணியில் ஈடுபட்டிருப்பதையும் காணலாம்.

## ஒரு பேராவலின் நிறைவு

தாவடி மக்களின் நீண்டநாள் ஆவல் எமது ஆலய பஞ்சமுக விநாயகருக்கு ஒரு சித்திரத்தேர் அமையவில்லையே என்பதுதான். அந்த நீண்ட நாள் ஆவல் இன்று பூர்த்தியாகிறது. விநாயகப் பெருமான் இந்த அரிய திருப்பணியில் ஈடுபடவும், இந்த அரிய காட்சியைக் கண்டுகளிக்கவும், ஒரு சந்தர்ப்பத்தைத் தந்துள்ளார். உலகம் முழுவதும் பரந்து வாழும் எமது கிராம மக்கள் தேர்த்திருப்பணி ஆரம்பமாகிவிட்டது என அறிந்ததும் தாராளமாக உதவி செய்தமை, விநாயகர் மீது அவர்கள் வைத்துள்ள அசையாத பக்தியின் ஒரு வெளிப்பாடு.

இந்த அழகு மிகு இரதத்தை உருவாக்கித்தந்துள்ளார் அராலியூர் சிற்பாஸ்திரியார் திரு.சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களும், அவரின் சகோதரரும், குழுவினரும். உரிய காலத்தில் உருவாக்கித்தந்த சிற்பக் கலைஞர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். எமது பண்பாடு, நாகரிகத்தின் ஒரு வெளிப்பாடாக இந்தச் சிற்பக் கலையைப்போற்றி வளர்க்க வேண்டிய பொறுப்பும் ஆலயங்களுக்குரியது.

இந்த மாபெரும் திருப்பணிக்குத் தாராளமாக உதவி செய்த விநாயக அடியார்கள் என்றும் போற்றுதற்குரியவர்கள். இவர்கள் எல்லோரையும் விநாயகப் பெருமான் தன் அருட்கடாட்ஷத்தை வழங்கி ஆசீர்வதிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். ''முன்னவன் முன்னிற்க முடியாதது ஏதுமில்லை''.

நன்றி

*த.வீரசிங்கம்*
*தலைவர்*

**தேர்த்திருப்பணிச் சபை**

*S.R. சரவணபவன்*
*செயலாளர்*


# ...யோ சென்ரர்

..., பழைய திரைப்படக் கொப்பிகள், வீடியோ அன் போட்டோ,
... சிங்கப்பூர் டெக்கரேசன், பொக்ஸ் செற், TV, டெக்
... நாடவேண்டிய ஒரே இடம்



# ...போட்டோ அன் பான்சி

உரிமையாளர்: மதிமுகராசா விஜயவர்மன்

# இந்தியத் துருப்பினர் தாக்கி பாகிஸ்தான் பெண் பலி

(புதுடில்லி)
காஷ்மீர் மாநிலத்தில் இந்தியத்துருப்பினரின் தாக்குதலில், பாகிஸ்தானில் பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் எல்லைக் கிராமங்கள் மீதே இந்தியத் துருப்புகள் மோட்டார் மற்றும் எறிகணைத் தாக்குதல் களை நடத்தியுள்ளனர்.
(உ-9)

# ஈராக்கிலிருந்து எண்ணெய் ஏற்றுவதற்கு சதாம் தடை

(பக்தாத்)
ஈராக்கிலிருந்து பெற்றோலிய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை ஒரு மாத காலத்திற்கு இடை நிறுத்துமாறு ஈராக்ஜனாதிபதி சதாம் ஹூஸைன் உத்தரவிட்டுள்ளார்.

பலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் இராணுவ ஊடுருவல் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இத்தடையை அவர் விதித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தடை நீடிப்பு ஒரு மாதத்தின் பின் மீளாய்வு செய்யப்படும் என்றும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தடையினால் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் எண்ணெய் விலையில சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவை இலக்கு வைத்தே மேற்படி தடை விதிக்கப்பட்டதாக ஈராக்கின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் அமீர்முஹம்மதரஷ்த் தெரிவித்துள்ளார்.

இது எண்ணெய்ச் சந்தையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அமெரிக்க பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.
(எ)

## பிரபாவின் பத்திரிகையாளர் மாநாடு

# தமிழர் பிரச்சினையில் புதியதோர் திருப்பம்

## வை. கோ. கருத்து

(புதுடில்லி)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாடு, உண்மையிலேயே ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இவ்வாறு பிரபா நேற்று முன்தினம் கூட்டிய பத்திரிகையாளர் மாநாடு தொடர்பாக தமிழக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை. கோபாலசாமி கருத்து தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்காக புலிகள் தற்போது எடுத்து வருகின்ற உண்மையான முயற்சிகள் உலகின் கவனத்திற்கு தற்போது கொண்டு வரப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதாக்கட்சிப் பிரமுகர் இல கணேசன் இது குறித்துக் கருத்துக் கூறுகையில்,

இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து தமிழகத்திற்கு வந்திருக்கும் மக்கள் விரைவில் தாயகம் திரும்பி அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வு ஏற்பட வேண்டும்.

அதற்கு அண்டை நாடாக இருக்கும் பாரதம், தனது பங்கு பணியை ஆற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.
(உ-9)

# சூனியக்காரி அடித்துக் கொலை

(புதுடில்லி)
பேய், பில்லி,சூனியம்என்பவற்றுடன் தொடர்புடையவர் என்ற காரணத்தால் பெண் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் இந்தியாவிலுள்ள திரிபுரா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

திருமணமாகாத இந்தப் பெண்ணை அடித்துக்கொன்றவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேவேளை, இவ்வாறான வர்களை அடித்துக்கொல்லும் சம்பவம்இந்தியாவில்அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.
(உ-5)

# அல்கெய்டா சந்தேக நபர்களின் பட்டியலில் 180 பேரின் பெயர்கள்

(மணிலா)
அல் கெய்டா தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களின் பட்டியலில் 180 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாகவும், சர்வதேச விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகமாக்கப்பட்டுள்ளதாகவும் பிலிப்பைன்ஸ் குடிவரவுத்திணைக்கள ஆணையாளர் அன்றிய டொறிங்ரோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், தென்கிழக்காசியாவில் இயங்கிவரும் ஜம்மா இஸ்லாமிய தீவிரவாத முஸ்லிம் அமைப்புத் தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.
(உ-7)

# பேருந்து விபத்தில் 12 பேர்பலி; 20பேர் காயம்

(ஸ்ரீநகர்)
காஷ்மீர் மாநிலத்தில் பேருந்து ஒன்று விபத்திற்குள்ளானதில், பன்னிரண்டுபேர் உயிரிழந்ததுடன் இருபதுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

இப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்ததிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களில் சிலரதுநிலைமைமிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
(செ)

# மேற்குலக நாடுகளுக்கு சவூதி எண்ணெய் ஏற்றுமதி செய்யும்

(ஜெருசலேம்)
மேற்குலக நாடுகளிற்கும் அமெரிக்காவிற்கும் ஈராக் எண்ணெய் வழங்காவிட்டாலும் சவுதி அரேபியா தொடர்ந்து வழங்கும் என அந்நாட்டரசாங்கம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புக்கு ஆட்சேபனை தெரிவிக்குமுகமாக அரேபிய நாடுகள் உலக நாடுகளுக்கு மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும் என ஈரான் நாட்டு மதத்தலைவரான அயதொல்லா கொமேனி எண்ணெய் உற்பத்தி செய்யும் அரபிய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால் சவூதி அரேபியாஇக் கோரிக்கையை நிராகரித்ததுடன் தொடர்ந்தும் தான் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபடுவேன் என உறுதிபடத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கும் ஏனைய மேற்கு நாடுகளுக்குமான மசகு எண்ணெய்ஏற்றுமதியை முப்பது நாட்களுக்கு நிறுத்தி வைக்கப் போவதாக ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
(செ)

## மணியம் தோட்டம் சென்று வரலாம்

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதிக்கு மக்கள் சென்றுவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

படையினரிடம் பதிவு செய்தபொதுமக்கள் சென்று வீடுளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இப்பகுதிக்கு சுமார் 7 வருடங்களாக பொது மக்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
(உ-223)

## தாதிகளுக்கான விஞ்ஞானமாணி பட்டப் படிப்பு

(கொக்குவில்)
இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் தாதிகளுக்கான விஞ்ஞான மாணிப் பட்டப் படிப்பு 2002-2003 கல்வியாண்டில் ஆரம்பிக்கவுள்ளதனால் இக் கற்கை நெறியை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விபரங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
(உ-243)

## பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது

(கொழும்பு)
ஐக்கிய அரபு குடியரசில் நடைபெற்று வரும் சாஜா முக்கோணஒருநாள்கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் நியூசிலாந்து அணிகளுக்கிடையே இடம்பெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றியீட்டியுள்ளது.

பாகிஸ்தான் 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 288 ஓட்டங்களையும் நியூசிலாந்து 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்களையும் பெற்றன.

பாகிஸ்தான் அணி 51 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.
(உ-9)

## இறாத்தல் படிகள் மீண்டும் பயன்பாடு

(ஊர்காவற்றுறை)
அனலைதீவில் உள்ள தனியார் கடைகள் சிலவற்றில் நிறுவை அளவைகளாகஇறாத்தல் படிகளைப்பயன்படுத்தப்படுவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.
(உ-75)

## எச்சரிக்கைச் சுவரொட்டி

(நெல்லியடி)
சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரை எச்சரிக்கும் விதத்தில் நெல்லியடிப் பகுதியில் பரவலாக சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

புலிகளின் பெயரைக் கூறி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்ற வாசகமும் அதில் காணப்படுகிறது.
(உ-247)

# எகிப்தில் கலவரம் வெடிக்கும் அபாயம்

(கெய்ரோ)
அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது எகிப்தியமாணவன் கொல்லப்பட்டதற்கு எகிப்தியர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எகிப்தியரின் இந்த ஆர்ப்பாட்டத்தில் 20 அமெரிக்கர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கலவரங்கள் வன்முறையாக வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளதால் எகிப்தில்பொலிஸ் காவல் அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது'
(உ-7)

# துப்பாக்கிப் பிரயோகம் 6 பேர் மரணம்

வெனிசுலா ஜனாதிபதிக்கெதிராக தலைநகர் ஹாகாஸில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது,பொலிஸாருக்கும் இனந்தெரியாதோருக்குமிடையில் ஏற்பட்ட துப்பாக்கி மோதல்களில் 6பேர் கொல்லப்பட்டதுடன், 80 பேருக்குமேல் காயமடைந்துள்ளனர்.

இம்மோதலில் இறந்தவர்களில் பொலிஸார் ஒருவரும் ஊடகவியலாளர் ஒருவரும் அடங்குவர்.
(உ-9)

# பிலிப்பைன்ஸில் கப்பல் விபத்தொன்றில் 23பேர் உயிரிழந்துள்ளனர்

(மணிலா)
பிலிப்பைன்ஸில் கப்பல் விபத்தொன்றில் இருபத்தி மூன்று பேர் உயிரிழந்துள்ளனர், இருபத்தேழுபேர்காணாமற் போயுள்ளனர்.

எனினும் இக் கப்பலில் பயணம் செய்த 249பேர் மீட்பு பணியாளர்களால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கப்பல் விபத்திற்குள்ளாகிய வுடன் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பலர் கடலினுள் குதித்ததனாலேயே உயிரிழந்துள்ளனர்எனமீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவிற்கு 110கிலோமீற்றர் தூரத்திற்கப்பாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.
(செ)

# காஷ்மீர் மாநிலத்திற்கு மேலதிக படையினரை அனுப்புமாறு கோரிக்கை

(ஸ்ரீநகர்)
காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேலதிக படையினரை அனுப்பிவைக்குமாறு காஷ்மீர் மாநில முதல்வர் பாரூக் அப்துல்லா மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியிடம் பேசவிருப்பதாகவும் அவர் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளிக்கும் போது தெரிவித்துள்ளார்.

பதற்றம் நிறைந்த பகுதிகளில் வாழும் மக்களின் வேண்டுகோளின் படியே, தான் இக்கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
(செ)

# குஜராத் முதலமைச்சரை பதவி நீக்க கோரிக்கை

(அயோத்தி)
குஜராத்தின் முதலமைச்சர் நரேந்திரமூர்த்தியை பதவியிலிருந்து நீக்குமாறு தெலுங்கு தேசம் உட்பட தேசிய ஜனநாயக முன்னணியும் சில முக்கிய உறுப்புக் கட்சிகளும் அச்சுறுத்தி வருகின்றன.

இது தொடர்பாக பாரதிய ஜனதாக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் இடம்பெற்று வருகிறது.

குஜராத்தில் ஏற்பட்ட கடும் வன்முறைகளுக்கு முதல்வர் நரேந்திரமூர்த்தி தான் காரணம் என்றும் அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து விலக்குவது தொடர்பாகவும் இச் செயற்குழுக் கூட்டம் இடம்பெற்று வருகிறது.
(உ-7)

# அடிமைகளாக இருந்த 42 தமிழர்கள் மீட்பு

(புதுடில்லி)
ஆந்திர மாநிலத்தில் கொத்தடிமைகளாக இருந்த இருபத்தியொரு குழந்தைகள் உட்பட நாற்பத்திரண்டு தமிழர்கள் தொண்டு நிறுவனம் ஒன்றினால் மீட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மாநிலத்திலுள்ள நெல்லூர் மாவட்டத்திலேயே இத்தமிழர்கள் பல வருடங்களாக கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை மீட்டெடுப்பதற்கு மேற்படி தொண்டு நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(செ)

## இன்று ஒரு தகவல்

# அவன் அவளுக்கு அடக்கம்

ஓர் ஏழைப் பிராமணனுக்குப் பணக்காரனாகிய ஒரு ஜவுளி வியாபாரி சீடனாக இருந்தான். ஜவுளி வியாபாரி பரமலோபி. கஞ்ச மகாப்பிரபு என்று தான் அவனைச் சொல்லவேண்டும். ஒரு நாள் ஏழை பிராமணன் தன் பாகவதப் புத்தகத்திற்கு உறைபோட நினைத்தான். ஆகவே, சிஷ்யனிடம் சென்று, ஒரு சிறிய துண்டுத் துணி வேண்டும் என்று கேட்டான். வியாபாரிதான் கர்ணன் ஆயிற்றே! அவன், 'சுவாமி; தங்களுக்கு இல்லை என்று சொல்வதற்கு என் மனம் வருந்துகிறது. சற்றுமுன்னால் சொல்லியிருந்தால், உடனே தாங்கள் கேட்டதைக் கொடுத்துவிட்டிருப்பேன். துரதிர்ஷ்டவசமாக இப்போது சிறிது துண்டு ஒன்றுமே என் கைவசம் இல்லையே என்றாலும் தாங்கள் கேட்டதை நினைவில் வைத்துக்கொள்கிறேன், ஆனால் தாங்கள் மட்டும் அடிக்கடி வந்து எனக்கு ஞாபகப்படுத்துங்கள்' என்று பதில்சொல்லி அனுப்பி விட்டான். ஏழைப்பிராமணன் பாவம், ஏமாற்றத்துடன் வெறுங்கையனாக வீட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

குருவுக்கும், சீடனுக்கும் நடந்த இந்த உரையாடலை அந்த சீடனுடைய மனைவி வீட்டின் பின்னால் இருந்து கேட்டாள். உடனே அவள் ஓர் ஆளை விட்டனுப்பிப் பிராமணனை வீட்டின் பின்புறமாக அழைத்துவரச் செய்தாள். பிராமணன் வீட்டின் உள்ளே வந்ததும், 'சுவாமி! தாங்கள் என் கணவரிடம் கேட்டது என்னவோ?' என்று கேட்டாள். பிராமணன் நடந்ததை விபரமாகச் சொன்னான். ஜவுளி வியாபாரியின் மனைவி 'சுவாமி! தாங்கள் கவலையில்லாமல் வீட்டுக்குப் போங்கள். நாளை காலையில் தேவையான துணி உங்கள் வீட்டுக்கு வந்து சேரும்' என்று பதில் சொல்லி அனுப்பினாள்.

அன்றிரவு ஜவுளி வியாபாரி வீட்டுக்கு வந்ததும் அவன் மனைவி, 'இன்றைக்குக் கடையை மூடியாகிவிட்டதா?' என்று கேட்டாள். 'ஆமாம் மூடியாகிவிட்டது. ஏன் கேட்கிறாய்' என்றான் வியாபாரி, அதற்கு அவள் 'உடனே இப்போதே கடைக்குப்போய் அங்கிருக்கும் விலையுயர்ந்த துணிகளில் இரண்டை எடுத்து வாருங்கள்' என்று சொன்னாள். எதற்காக இந்த அவசரம்? நாளைக் காலையில் கொண்டு வந்து தருகிறேனே! என்றான் ஜவுளி வியாபாரி. ஆனால் அவன் சொன்னதை அவனுடைய மனைவி காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. 'முடியாது எனக்கு இப்போதே அந்தத் துணிகள் வேண்டும். இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்' என்று அவள் முகத்தில் அடித்தாற் போல் சொல்லிவிட்டாள்.

பாவம்! இப்போது வியாபாரி என்ன சொல்லமுடியும், செய்யமுடியும்? மனைவி என்பவள் வீண் சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டிக் கழிக்கக்கூடிய ஆன்மீகக் குரு இல்லையே! மறு பேச்சில்லாமல் உடனே கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டிய அபாரமான ஆற்றல் வாய்ந்த 'தலையணை மந்திரக் குரு' ஆயிற்றே அவள்! அவனுடைய வித்தைகள் பலிக்கக்கூடிய இடமா இது? தப்பித் தவறி அவள் சொன்னதைக் கேட்காமல் போனால் வீட்டிலே அவனுடைய நிலைமை என்ன ஆவது? அவனுடைய மன அமைதியை இல்லாள்இல்லாத தாக்கி விடுவாளே! மனைவி சமாதானம் அடையாமல் போனால் தன் மன அமைதி பஞ்சாய்ப் பறந்து போய் விடும். அன்றைய இரவுப் பொழுது பெரும்பாடாக முடியும் என்பதைஉணர்ந்த ஜவுளி வியாபாரி, அந்தப் பாதி ராத்திரியில் வேளையில்லாத வேளையில் மீண்டும் போய்க் கடையைத் திறந்தான். மனைவி கேட்டபடியே துணிகளை எடுத்துவந்து அவளிடம் சமர்ப்பித்தான்.

மறுநாள் காலையில் அந்த நல்ல பெண்மணி துணிகளைக் குருவுக்கு அனுப்பி வைத்தாள். அப்போது அவள் 'இனிமேல் தங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால் எனக்குத் தெரிவியுங்கள். நான் கொடுத்தனுப்புகிறேன்' என்று சொல்லி அனுப்பினாள். ●

நன்றி
ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

# யாழ். மாநகரசபையை மேலும் முன்னேற்ற சரியான தருணம் இதுவே

## பொன்விழாவில் நீதிபதி விக்னராஜா உரை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் போர் ஓய்ந்து சமாதானக் கீற்று தென்படுகிறது. இது யாழ். மாநகர சபைக்கு நிதி கிடைக்கவும், அதனைக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லவும் ஒரு நல்ல வாய்ப்பாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா அண்மையில் இடம் பெற்ற யாழ். மாநகர சபையின் பொன் விழாக் கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மாநகர முதல்வர் செ கந்தையன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் நீதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

இரண்டுதசாப்த காலமாக இடம் பெற்ற போரினால் யாழ். மாநகரப் பகுதியின் பல இடங்கள் உருக்குலைந்து போயுள்ளன.

இவற்றையெல்லாம் பழைய நிலைக்குக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு மாநகர சபையையே சார்ந்தது.

நிதானமும் பொறுப்புணர்வும் மிக்க யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் தொடர்ந்தும் இப் பண்புகளைக் கட்டிக் காப்பார்களாயின் மாநகர சபை உயர்ந்து உச்சநிலையை அடையும் என்றார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் உரையாற்றுகையில்;

கடந்த காலங்களில், யாழ். மாநகரசபைக்கான நிதி ஒதுக்கீட்டில் அரசு பாரபட்சம் காட்டி வந்தது.

இனிவருங்காலங்களில் இவ்வாறானதோர் நிலை இருக்காது.

தவிரவும், மாநகரசபையின் வளர்ச்சிக்காக எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க நான் தயாராகவுள்ளேன் என்று குறிப்பிட்டார். (உ-10)

# உரிமைகள் மறுக்கப்படும்போது போராடுவது தவிர்க்க முடியாதது

## துணைவேந்தர் புலிகளை வரவேற்று உரை

(யாழ்ப்பாணம்)

கடந்த 50 வருடங்களாக அரசாங்கம் தமிழினத்தை அடக்கி அவர்களின் உரிமைகளை நசுக்கியதன் விளைவுதான் இன்றைய ஆயுதப் போராட்டம்- எந்தவொரு இனமும் உரிமைகள் மறுக்கப்படும்போது போராட முற்படுவது தவிர்க்க முடியாதது. அந்தவகையில் தமிழினத்தின் உரிமைகளை மீட்க வந்த கதாநாயகர்களாக தலைவர் பிரபாகரனும், விடுதலைப் புலிகளும் விளங்குகிறார்கள்.

அண்மையில் பல்கலைக் கழகத்தில் புலிகளை வரவேற்கும் விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இந்நூற்றாண்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீரம்செறிந்த உரிமைப் போராட்டங்களின் வரிசையில் தமிழ்மக்களின் போராட்டம் முன்னணியில் நிற்கின்றது.

அதற்குக் காரணம் தலைவர் பிரபாகரனின் ஆளுமை மிக்க வழிகாட்டலும் போராளிகளின் தியாகங்களுமாகும் என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

ஒரு இனத்தின் ஆணிவேராக விளங்குவது மரபு வழி நிலமாகும். எனவே சிங்கள அரசுகள் தமிழரின் நிலத்தைப் பறிப்பதன்மூலம் அவர்களின் தேசியத் தன்மையை அழித்துவிடலாம் என எண்ணியது.

தமிழர் நிலங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். உரிமைகேட்ட தமிழர் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இந்நிலையில் அகிம்சை வழிப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்து உலகம் வியக்கும்வண்ணம் ஆயுதமேந்தி இளைஞர்கள் போராடத் தொடங்கினார்கள்.

இன்று சிங்களத் தலைமைகள் உண்மையை உணரத் தொடங்கிவிட்டன.

அதன் முதற்கட்டம்தான் புரிந்துணர்வுஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் தேசியத் தன்மையைப் பிரதிபலிக்கும் என்று விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் எதிர்பார்க்கிறார்கள் என்று குறிப்பிட்டார். (எ-19)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் பாடசாலை விருத்திச் சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (உ)

### க. பொ. த. (உ|த) வினாத்தாள்கள் அடுத்தவாரம்

(யாழ்ப்பாணம்)

2002 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அடுத்த வாரப் பகுதியில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளன.

இதற்கான எழுது பொருட்கள் ஏற்கனவேயாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (எ-2)

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(உ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளன நடப்பாண்டிற்கானபொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30மணிக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

(உ)

# வட-கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் ஆயுட் காலம் 6 மாதங்களால் நீடிப்பு

(தென்மராட்சி)

வடக்குகிழக்கிலுள்ளஉள்ளூராட்சி சபைகளின் ஆயுட் காலம் மேலும்6 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 16 ஆம் திகதியுடன்உள்ளூராட்சிசபைகளின் ஆயுட் காலம் முடிவுறவிருந்ததும்நீடிப்பின்அவசியம்குறித்து யாழ்மாநகர முதல்வர் எஸ். கந்தையன் சம்பந்தப்பட்டதரப்புகளுக்கு வலியுறுத்தி வந்தமையும் தெரிந்ததே.

இதேவேளை, மேற்படிநீடிப்புக்கு நன்றி தெரிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்துறை அமைச்சர், புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோருக்கு மாநகர முதல்வர் கடிதம் எழுதியுள்ளார். (உ-77)

# பரு. சாரதா சேவாச்சிரமம் உணவுப் பொருள் உதவி

(யாழ்ப்பாணம்)

வன்னியில் போஷாக்கின்மையால் வாடும் எம் தமிழ்ச் சிறார்களின் வாழ்வு மேம்பாடு சுருதி 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்க பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் முன்வந்துள்ளது.

பொருளாதாரத் தடை மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்தல் மற்றும் நிர்க்கதி நிலை காரணமாக வன்னியில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாரிய போஷாக்கின்மையால்பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி அமைப்புக்கள் பல இப் பகுதியில் இயங்குகின்ற போதிலும். இச் சிறாரின் நிலை குறித்து உள்ளூர் அமைப்புக்கள் மட்டுமே தீர்வுதேட வேண்டியுள்ளதாகவும்கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் மன்றச் செயலாளர் டாக்டர் கே. சிவபாலன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மக்கள் விடுதலை முன்னணி 6 ஆயிரத்து 608 பேரை படுகொலை செய்தது

(கொழும்பு)

ஜே வி. பி.யினர் 1980 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மேற்கொண்ட வன்முறைகளில் 6 ஆயிரத்து 608 பேர் படுகொலை செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாவது வாசிப்புமீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தப் படுகொலைகள் தொடர்பாக ஜே.வி.பி.யின் தலைவர் மன்னிப்பும் கோரியிருந்தார் ஆனால் இது காலம் கடந்தஞானம்என்றும் அவர் வர்ணித்தார்.

(த)

### நோயால் கோழிகள் இறப்பு

(துன்னாலை)

வடமராட்சிதெற்கு, மேற்கு பகுதிகளில் வெயில்வெப்பத்தின் காரணமாக நோயால் பாதிக்கப்பட்டுதினமும்கோழிகள் இறந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-41)

## சிந்தனைக்கு விருந்து

சாறாகத் தமிழினிலே வடித்து வழங்குக

'நூறாண்டில் தமிழ் செத்த மொழியாகும்'
நூதனமாய் ஒருவர் சொன்னார்
சீறாமல் அவர் சொன்ன செய்தியினைச்
சிந்தையிலே இருத்திக் கொண்டு
வேறாகும் மேலையவாம் மொழிகளிலே
விளங்குமறி வியல்கள் எல்லாம்
சாறாகத் தமிழினிலே வடித்து வரும்
சந்ததிக்கு வழங்கல் வேண்டும்.

- பழையவன்

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்தை தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐ.தே.மு.அரசாங்கம் நீக்குவதற்கு எடுக்கும் முயற்சிகளை தடுந்து நிறுத்துமாறு தேசியக் கூட்டுக்குழு ஜனாதிபதி குமாரதுங்கவை கேட்டுக்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீது தடையை விதித்தவரென்ற வகையில் மேலும் ஒருஅனர்த்தம் விளையாது தடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடமே யுள்ளதுஎன்றுதேசியக்கூட்டுக் குழுவின் செயலாளர்டாக்டர் பியசேன திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.மு.அமைச்சர்மகேஸ்வரன் புலிகள் மீதான தடைமே முதலாம் திகதியுடன் நீக்கப்படவுள்ளதாகவும் புலிகள் மீதுள்ள தடை பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐ.ஆர்.ஏ.இயக்கம் தடை செய்யப்பட்டிருந்த போது பிரிட்டிஷ் அரசு அதனுடன் பேச்சுக்களை நடத்தியது. தடை நீக்கத்திற்கென காட்டப்படும் காரணங்கள் பேச்சுக்களுடன் தொடர்புபட்டதல்ல.

அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையேஎழுதப்படாத ஒப்பந்தமொன்று உள்ளது.

அரசாங்கத்தின் ஆசிகளுடன் சுதந்திர ஈழத்தை அமைப்பதற்குபேச்சுக்கள் வழிவகுக்க வேண்டும் என்பதே அதுவாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னைய நிகழ்வுகள்இதனை உணர்த்துகின்றன.இவ்வாறு ஜனாதிபதிக்கு கூட்டுக்குழு மேலும் கோரிக்கை விடுத்துளளது. (உ)

## புதுக்கவிதை

இதுவே நூலாசிரியரின் ஆளுமைக்கு நாம் செலுத்தக் கூடிய கைம்மாறும் நன்றியும் ஆகும். ■

## கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல்

(கொக்குவில்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு 2001-2002 கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்டு, யாழ். பிராந்திய நிலைய மூடாக பதிவு செய்து கொண்ட 150மாணவர்களையும் கற்கைநெறி தொடங்குவது தொடர்பாக கலந்துரையாட எதிர்வருப் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்திற்கு வருகை தருமாறு இணைப்பாளர் ச.ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

அன்றைய நிகழ்வில் கற்கை நெறியை தொடரவிரும்பாத மாணவர்களுக்கான பதிவுக் கட்டணத்தைமீளப் பெறுவது தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-243)

# யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்சார் பயிற்சி வழங்குவது அவசியம்

## முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அவர்களுக்கு தொழில் சார் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் அவர்களின் தொழிற் திறனையும். சுயதொழில் முயற்சித் திறனையும் ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு முன்னாள் அதிபரும் மூத்த கல்வியாளருமான அ. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் நிலை குறித்து அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் மேற் கண்டவறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் றுகுணு போன்ற இடங்களில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் தொழில்சார் பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் 'வேலையின்மை' என்ற நிலையில் இருந்து மாற்றப்பட்டு தொழில் சார் பயிற்சிகளை பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும்.

இத்தகைய தொழில் சார் பயிற்சிகளை யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்குவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவுவதுடன் இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ந)

# பாராளுமன்றத்தைக் கலைப்பது ஜனநாயகத்திற்கு முரணான செயல்

## அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம்அரசிற்கு இருக்கும் வரை பாராளுமன்றத்தை கலைப்பது ஜனநாயகத்திற்கு முரணான செயல் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரங்கள் குறித்த யோசனை ஒன்றை மே மாதமளவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ள அரசியல் திருத்த சட்டமூலத்தில் இணைத்து கொள்ள விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற் கண்டவாறு பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கொள்கைப் பிரகடனத்தைப் பாராளுமன்றம் நிராகரிக்கும் போதும், வரவு செலவுத் திட்டம் தோல்வியடையும் போதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசாங்கத்தை தோல்வியடையச்செய்துபாராளுமன்றத்தை கலைக்கலாம்.

இந்தச் சந்தர்ப்பங்களில் பாராளுமன்றில் பொறுப்பு வகிக்கும் ஒருவரால் கலைக்கப்படுவதில்லை.

திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகரினதும் அனுமதியைப் பெற்ற பின்னரே பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்ற யோசனையை சேர்த்துக் கொள்ளவுள்ளோம். இதனால் ஜனநாயக வழிமுறைகள் பேணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-9,5)

## சர்வதேச இந்துமதகுரு பீடத்தினரின்

# சமய சமூக கலைப் பிரமுகர்கள் 65 பேர் பட்டமளித்து கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குரு பீடம் யாழ். மாவட்டத்தில் நடத்திய இலங்கை இந்துமத குருபீடாதிபதி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவசிவாச்சாரியார் ஞாபகார்த்த ஆன்மீக பெருவிழாவில்பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட சமய, சமூக, கலைப் பிரமுகர்களின் பெயர் விபரங்கள் வருமாறு'

''சிவாகம கலாநிதி''

மஹாராஜ ஸ்ரீ.து.சண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீனம்), சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக்குருக்கள்(வடகோவை) சிவஸ்ரீ ச. செல்லப்பாக்குருக்கள் மாதகல், சிவஸ்ரீ சோ. சுப்பிர மணியக் குருக்கள் (கோப்பாய்), சிவஸ்ரீ இ.சுப்பிர மணியக் குருக்கள் (அரியாலை,)

''வித்யா கலாபமணி''

பண்டிதர் பிரம்ம ஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா (கோப்பாய்),

''வைதீக கிரியாமணி''

பிரம்ம ஸ்ரீ எஸ். ஞான சர்மா (மட்டுவில்)

''சிவாகம கிரியா பூஷணம்''

சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் (காரைநகர்) சிவஸ்ரீ அ.சந்திசேகரக்குருக்கள் (நீர்வேலி), சிவஸ்ரீ.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் (புன்னாலைக் கட்டுவன்) சிவஸ்ரீசோ.வாகீஸ்வரக் குருக்கள் (ஊரெழு)

''கிரியா கலாபமணி''

மாவை ஆதீன இளவரசு சிவஸ்ரீ.து.ஷ இரத்தின சபாபதிக் குருக்கள (கனடா), சிவஸ்ரீ.க. வைத்தீஸ்வரக் குருக்கள் (கந்தவனக் கடவை), சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கல் (சுன்னாகம்), சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள் (அத்தியடி),

''முத்தமிழ்க் கலாநிதி''

மஹா வித்துவான் பிரம்ம ஸ்ரீந.வீரமணி ஐயர் (இணுவில்),

அருள் ''ஞான ஜோதி''

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

''சிவநெறிக் கலாநிதி''

பிரம்ம ஸ்ரீ அ. துரைசாமி ஐயர் (வீணியவரை மாவிட்டபுரம்)

எஸ். கணபதிப்பிள்ளை (சங்கீத பூஷணம்- சுழிபுரம்), சைவப்புலவர் வ.கந்தசாமி (கந்தர் மடம்), அருட்கவி சி. வினாசித்தம்பி அளவெட்டி), திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் சுன்னாகம்),

எஸ்,சிவஷண்முகமூர்த்தி(சுழிபுரம்),சைவப்புலவர் இராசையா ஸ்ரீ தரன் (நாச்சிமார் கோவிலடி),

சிவநெறிச்செம்மல்

சி. சக்திகிரீவன் இந்துசமயப் பேரவை - ஏழாலை, சாமியம்மா விமலா திருப்பதி ஆச்சிரமம் - தெல்லிப்பழை, சைவமணி கி.மருதப்பிள்ளை வட்டுக்கோட்டை,

சிவநெறிச்செல்வர்

வெத்திந வ. குமாரசாமி ஐர் காங்கேசன் துறை, அ.க. சண்முகதாஸன் சங்கானை, ஓதுவார் பால சுப்பிரமணியம், சபா.நாராயணன் வடலியடைப்பு,

கலைமணி

எஸ். சிவபாலசுப்பிரமணியம் பண்டத்தரிப்பு,

இசைஞானகலாபமணி

எஸ்.இராசு நாதஸ்வரம்- நல்லூர், எஸ். ஆர். ஞானசுந்தரம் நாதஸ்வரம்- இணுவில்,எஸ்.குப்புசாமி நாதஸ்-வரம்-நல்லூர், செல்லத்துரை ராசு மோர்சிங்- மல்லாகம்,

இசைஞானகலாநிதி

கே. ஆர். சுந்தரமூர்த்தி நாதஸ்வரம்- இணுவில், வி.கே. கானமூர்த்தி நாதஸ்வரம்-நல்லூர், பி.எஸ். பிச்சையப்பா நாதஸ்வரம் - நல்லூர், எஸ்.ராதாகிருஷ்ணன் வயலின்- இணுவில்,

லயஞானகலாபமணி

என்.முருகானந்தம் தவில்- இணுவில், என். ஜெயராமன் தவில் - வடலியடைப்பு, எஸ்.சின்னராசா மிருதங்கம்- இணுவில்,

லயஞானமணி

எஸ். கிருஷ்ணமூர்த்தி தவில்-இணுவில், எஸ்.சிறி தவில்-அளவெட்டி.,

சிறபக்கலை மாமணி

விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் புத்தூர், விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சி. ஜெயப்பிரகாஸ் திருநெல்வேலி,விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சு. பாஸ்கரன் யாழ்ப்பாணம், விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சு. சரவணபவன் யாழ்ப்பாணம்,

சிற்பக்கலாரெத்தினம்

தங்கேஸ்வரன் அராலி, நவரெத்தினம் அராலி சி. அமரசிங்கம் அராலி.

கலைஞானமணி

வேலாயுதம்சண்டிலிப்பாய், து. வைத்திலிங்கம் உதவி அரச அதிபர், தி.ச.வரதர் யாழ்ப்பாணம்,

முத்தமிழ்க் கலாபூஷணம்

என்.கணபதிப்பிள்ளை சின்னமணி-அச்சுவேலி, அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை,

வித்யா கலாபூஷணம்

கலாநிதி தி. கமலநாதன் பீடாதிபதி. யாழ். தேசியகல்வியற் கல்லூரி,

இலக்கிய கலாநிதி

பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம்(நந்தி)யாழ்ப்பாணம்,

அறுசுவைக்கலாமணி

பிரம்மஸ்ரீ ஞா.சீதாராம சர்மா யாழ்ப்பாணம்,

சிவஞான கலாபமணி

சிவத்திரு சோழியூரான் பிறைசூடிக்குரு சுழிபுரம்,

பரதக்கலாபமணி

திருமதி கிருஷாந்திரவீந்திர ராஜா இராமநாதன் நுண் கலைப்பீடம்,

நாடககலாபமணி

வி.என் செல்வராஜா சண்டிலிப்பாய்,

அலங்கார பூஷணம்

க. பஞ்சாட்சரம்இணுவில்,

வைத்திய கலா பூஷணம்

டாக்டர் ஏகாம்பரம் உமாகாந்தன் நாயன்மார்க்கட்டு. (உ-9)

# எயர்லங்கா விமான சேவை 20 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

எயர்லங்கா விமான சேவை நிறுவனம் இம் மாதம் 20 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமான விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

சுமார் 100 பயணிகள் ஒரே நேரத்தில் பயணம் செய்யக் கூடிய இந்த விமானத்தின் பயண கட்டணமாக போக வர 3800 ரூபா அறவிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை எயர்லங்கா விமானசேவை நிறுவனத்தைவிட மேலும் நான்கு விமான சேவை நிறுவனங்கள் விமானசேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். (வ)

# முதியோரைப் பேண அமைப்பு அவசியம்

## ஐ.நா.மாநாட்டில்வலியுறுத்து

(லண்டன்)

உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிர்க்கதியற்று நிற்கும் முதியோர்களின் நலன் கருதி ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் போல முதியோர் அமைப் பொன்று உருவாக்கப்பட வேண்டும்.

முதியோர் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டாவது சர்வதேச மாநாடு மைற்றேற்றில் நடைபெற்றபோதே அரசசார்பற்ற நிறுவனங்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளன.

முதியோர் தொடர்பாக உலகின் அரச சார்பற்ற நிறுவனங்களின் மன்றம் கருத்து தெரிவிக்கையில்;

உலக நாடுகளின் பல்வேறு அமைப்புக்களினாலும் மேற் கொள்ளப்பட்டு வரும் முதியோர் நலன்புரி நடவடிக்கைகள் யாவும் புதிதாக அமைக்கப்படவுள்ள அமைப்பிடமே கையளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளன.

மைற்றேற்றில் நடைபெற்று வந்த இம்மாநாடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

கணைகொடிது யாழ்கோடு
செவ்வியது ஆங்கன்ன
வினைபடு பாலால் கொளல்
- குறள்

# வலம்புரி

## ஜெயாவுக்கு நல்லதல்ல

தமிழக அரசியலை சினிமாக் கலாசாரம் ஆக்கிரமித்ததன் பயனைத் தமிழகம் தான் அனுபவிக்கப் போகிறது என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் நிலைமை தமிழகத்தின் எல்லையைத் தாண்டி ஈழத் தமிழர்களுக்கும் தீவினை பயப்பதாக அமைந்து விட்டது.

சினிமாத்துறையில், ஆடல், பாடலில் ஈடுபட்டுத் தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட செல்வி ஜெயலலிதா தமிழ் உணர்வை இழந்த நிலையில், பொறுப்பற்ற முறையில், பேசத் தொடங்கியிருப்பது தமிழ் உலகிற்கே பெரும் பாதிப்பாகும்.

ஈழத் தமிழர்கள் தம் மண்ணில் வாழமுடியாது என்ற நிலையில் தம் சகோதரர்கள் என்ற உறவோடு தமிழகம் சென்று தஞ்சமடைந்த போது ஈழத் தமிழ் மாணவர்கள் தமிழகப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்குத் தடை விதித்தவர் அப்போது முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா.

சகோதர உறவோடு தம்வீட்டில் வாழ முடியாதென்ற சூழ்நிலையில் உயிரைப் பணயம்வைத்து வங்கக் கடலினூடாகத் தமிழகம் சென்ற ஈழத் தமிழர்களுக்கு கல்வி கற்பதற்கே தடை விதித்த ஜெயலலிதாவிடமிருந்து ஈழம் வாழ் தமிழர் எந்த அனுதாபத்தையும்-ஆதரவையும் பெறமுடியாதென்பது வெளிப்படை. பரவாயில்லை, ஆதரவு தராவிடினும் ஆத்திரம் ஊட்டாமல் இருந்தாலே போதும் என்பது இப்போதைய முடிவு. நிலைமை இப்படி இருக்கும் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய வேண்டும், என ஜெயலலிதா கோரிக்கை விட்டுள்ளார்.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது, அந்த சமாதான முயற்சியை உலக நாடுகள் வரவேற்றிருக்க தமிழ் நாட்டின் முதல்வராக இருக்கும் ஜெயலலிதா பிரபாகரனைக் கைதுசெய்ய வேண்டுமெனக் கூறுவது அவ்வளவு நல்லதல்ல. அ.தி.மு.க வின் பொதுச் செயலாளராக செல்வி ஜெயலலிதா இருக்க விரும்பினால்தேவையற்றகோரிக்கைகளைக் கைவிட்டுப் பொறுமையாக இருப்பதே நல்லது.

## திறனாய்வுக்களம்

# புதுக்கவிதை ஆய்வில் ஒரு நல்ல முன்முயற்சி

# "எண்பதுக்குப் பின்னர் ஈழத்துப் புதுக் கவிதை"

**கவிஞர் இ. முருகையன்**

'எண்பதுக்குப் பின்னர் ஈழத்துப் புதுக்கவிதை': இது.பொ. கமலரூபன் தமது சிறப்புப்பட்டத் தேர்வின் பொருட்டுச் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையின் புத்தக வடிவம். இளைய தலைமுறையிலிருந்து ஆர்வமும், பகுப்புணர்வும் வாய்ந்த இலக்கிய விமரிசகர் ஒருவர் தோன்றியுள்ளார் என்றவாறு பலராலும் அவதானிக்கப்பட்ட ஒருவர் கமலரூபன். யாரும் எதிர்பாராத விதத்தில் அவர் திடீரென்று நம்மை விட்டுப் பிரிய நேர்ந்தமை ஈழத்தமிழ் எழுத்துலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. என்றாலும் அவர் மறைந்த பின்னர் அவரது நூலொன்றினை வெளியிட்டுள்ள 'கமலரூபன் நினைவுச் சபை' இன் பணி பாராட்டத்தக்கது; மெச்சி வரவேற்கத் தக்கது; மன ஆறுதல் தரவல்லது.

### புதுக்கவிதை

புதுக்கவிதை விமர்சனத் துறையில் ஈடுபட்ட முன்னோடி விமர்சகர்களில் ஹாட்லிக் கல்லூரியின் அதிபராய் விளங்கும் எம். சிறீபதி குறிப்பிடத்தக்கவர். அவருக்கு முன்பின்னாக, 'கருணையோகன்' எனப்பட்ட செ. யோகராசாவும் செம்பியன் செல்வனும் பிறரும் புதுக்கவிதை பற்றி அக்கறை கொண்டோரிற் சிலராவர்.

அவை எல்லாம் ஆரம்ப காலத்துச் சங்கதிகள். ஐமபதுகளின் பிற்பாதியிலே தான், சி. சு. செல்லப்பாவின் 'எழுத்து' என்ற இலக்கிய மாத ஏட்டினது முழுமூச்சான முன்முயற்சியினால், புதுக்கவிதை பற்றிய சர்ச்சைகளும் அது பற்றிய விழிப்பும் தலையெடுத்தன. அக்காலத்து வாதப்பிரதிவாதங்களில் ஈழத்தவர்களான தர்மசிவராமு, கே. எஸ். சிவகுமாரன், கா. சிவத்தம்பி உட்பட மேலும் பலர் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழகத்து எழுத்தாளர்களும், இலங்கைப் படைப்பாளர், திறனாய்வாளர்களும் தம்மிடையே நெருக்கமான, உயிர்ப்புமிக்க தொடர்பாடல்களை நடத்திக் கொண்டிருந்த காலம் அது.

### தேடல்களும் சோதனைகளும்

அதனைத் தொடர்ந்து அறுபதுகளிலும், எழுபதுகளிலும் தமிழ்க் கவிதைப் புலத்திலே பல பரிசோதனை முயற்சிகளும், கோட்பாட்டு முன்வைப்புகளும், மறுப்புகளும், சமாதானங்களும் இணக்கங்களும் என்றவாறு மும்முரமான தேடல்கள் நடைபெறலாயின. எனினும் எழுபதுகளின் பிற்பாதியிலே தான் ஈழத்தமிழரின் சமூக இருப்புக்கும், சமூகவாழ்வுக்கும் கடுமையான சோதனைகளும், சவால்களும் எழுந்தன. அரசியலிலும், பொதுவாழ்விலும் தோன்றிய அதிர்வுகள் கலைவாழ்விலே கணிசமான விழிப்பினைக் கோரி நின்றன. பலதிசைப்பட்ட இழப்புகளும், அசைப்புகளும் கலைச் சிந்தனைகளில் உருமாற்றங்களை நிகழ்த்திக் காட்டின. இந்த உருமாற்றங்களில் ஓர் அம்சமாகவே புதுக்கவிதை நோக்கிய பயணத்தின் துரிதப் பாட்டையும் நாம் காணுதல் வேண்டும்.

அவ்வாறு காண்கையில் சண்முகம் சிவலிங்கம், எம். ஏ. நுஃமான், சி. சிவசேகரம் முதலியோரின் முன்னெடுப்புகளை நினைவு கூராமல் விட முடியாது. இந்த முன்னெடுப்புகளின் முதிர்பேறாகத்தான் எண்பதுக்குப் பின்னர் ஏற்பட்ட ஈழத்துப் புதுக்கவிதைகளின் மலர்ச்சியை நாம் சந்திக்கிறோம்.

### தொடக்கத்தின் தொடக்கங்கள்

எண்பதுக்கு முன் ஏற்பட்ட முகிழ்ப்புகளைக் கமலரூபன் தமது ஆய்வின் முதலாம் இயலிலே சுட்டிச் செல்கிறார். எண்பதுகள் வரையான ஈழத்துப் புதுக்கவிதைப் பண்புகள் பற்றி அவர் எழுதியுள்ளவை 'தொடக்கத்தின் தொடக்கங்களை' விசாரிக்கும் சுருக்கமானதோர் அறிமுகமாய் அமைகின்றன. அக் காலத்துக் கவிதை வகைகளைக் கமலரூபன் பின்வருமாறு இனங் காட்டுகிறார்.

அ) தனிமனித மன உளைச்சல் பற்றிய முனகல்கள்.
ஆ) பார்வை ஆழமோ படிமச் சிறப்போ இல்லாத துணுக்குகள்.
இ) சிறந்தபடிமங்களும் கருத்துகளும்கொண்ட கவிதைகள்.

தொடர்ந்து நேர்ந்த வளர்ச்சிகளை (1) இனவுணர்வு, (2) பெண்ணியம், (3) சாதி, (4) சுரண்டல், (5) நடத்தை விமர்சனம், (6) காதல் என ஆறு வகைகளைச் சார்ந்தனவாய் வகுத்து விளக்குகிறார். இந்த வகைப்பாடுகள் கவிதைகளின் அடிக்கருத்துகளை ஆதாரமாகக் கொண்டவை என்பது கண்கூடு.

ஒரு கலைப்படைப்பின் உள்ளடக்கமே அதன் உயிர் ஆகும். உள்ளடக்கத்தின் பண்புகளாலும், பயன்களாலுமே கலையின் வடிவம் பெரிதும் நிருணயிக்கப்படும். அவ்வாறன்றி கலைப்பெறுமானத்துக்குப் புறம்பான சம்பிரதாயங்களாலும், விதி நியமங்களாலும் படைப்பாளிகள திசைதிருப்பப்படும் போது தான் கலைப் போலிகள் உற்பத்திபண்ணப் படுகின்றன. அவ்வாறான போலித்தனங்களை நிராகரிக்கும்போதே உள்ளார்ந்த வலிமை படைத்த, திடகாத்திரமான, ஆரோக்கியமான ஆக்கங்கள் பிறப்பெடுக்கின்றன.எனவே தான் கமலரூபன் புதுக்கவிதைகளை உள்ளடக்க ரீதியாக வகைப்படுத்திக் காணமுற்பட்டமை அவர்தம் ஆய்வு முயற்சியின் பெறுமதிக்கு உத்தரவாதம் தரும் ஓர் அம்சமாக விளங்குகிறது.

### போர்க்கால கவிதைகள்

அவ்வாறு ஆராய்கையில் இனவுணர்வுக் கவிதைகள் இருவகைப்பட்டு அமைந்து கொண்டமை சுட்டிக்காட்டப்படுகிறது. ஒரு வகையானவை போர தந்த இழப்புகளையும் கொடுமைகளையும் பாடுவன, மற்றொரு வகையானவை போரின் நியாயப்பாட்டுக்கும் எழுச்சியின் இன்றியமையாமைக்கும் அழுத்தம் தரும் போக்கினை உடையன. இவ்விரு வகையான படைப்புகளையும் ஓரளவுவிரிவாகவும், தக்க எடுத்துக்காட்டுகள் தந்தும் விளக்கிச் செல்கிறார், கமலரூபன், இங்கு புதுவை இரத்தினதுரையின் பங்களிப்புக்கு உரிய அழுத்தம் தந்து ஊன்றி நோக்கி எழுதியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது. புதுக்கவிதை ஆர்வலர்களும், படைப்பாளிகளும் ஆகிய சேரன், வ. ஐ. ச. ஜெயபாலன், வில்வரத்தினம் முதலானோர் கமலரூபனின் பரிசீலனைக்கு உள்ளாகியுள்ளனர்.

### புலம் பெயர் கவிதைகள்

நாலாம் இயலிலே புலம் பெயர் கவிதைகள் பற்றிய பார்வை இடம்பெற்றுள்ளது. இங்கிருந்த போர்ச்சூழலின் நெருக்கடிகளைத் தாங்கமுடியாமலும், குழுமோதல்களின் பாதிப்பினாலும், பிழைக்கும் வழிகளைத் தேடியும் இளையோர் பலர் வேற்று நாடுகளிற் புகலிடம் தேடிப் போயினர். இது வரலாறு. காலப் போக்கிலே தத்தம் பெற்றோர். நெருங்கிய சுற்றத்தார் என்போரையும் புலம் பெயர்ந்த இளையோர் தாம் தாம் சென்று குடியேறிய வேற்று நாடுகளுக்கு அழைத்துக் கொள்ளும் போக்கும் மெல்ல மெல்ல வளர்ந்தது. வாழ்க்கைத்துணைத் தேவை (திருமணம்) காரணமாகவும் புலம்பெயர்வுகள் நடைபெற்றன. இப்படியெல்லாம் புலம்பெயர்ந்தோரில் ஒருபகுதியினர் கலை நெஞ்சமும், எழுத்தார்வமும் கொண்டோராய் இருந்தனர். இப்படிப் பட்டவர்களுள் புதுக்கவிதைத் துறையிற் புகுந்து பணியாற்றும் ஆற்றல்கொண்டோரும் இருந்தனர். இவர்களின் பங்களிப்புகளும் கமலரூபனின் கவனிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன.

இவர்களின் ஆக்கங்களில் தாயகத்தைத் துறந்து செல்லும் நிர்ப்பந்தத்தினால் எழுந்த பிரிவுத்துயர். ஆற்றாமை, ஏக்கம், தஞ்சமடைந்த நாடுகளில் அகதிகளாய் அலைய வேண்டியுள்ளமை பற்றியதாழ்வுணர்ச்சி' தாயகத்தில் நிலவிய கூட்டு வாழ்க்கை முறையை இழந்து தனித் 'துகள்களாய்'ச் சிதறுண்டு மிதக்க வேண்டிய அந்தரிப்பு, அன்னிய பண்பாட்டுச் சூழலிலே தோய்ந்து கலந்துகொள்ள இயலாத தனிமை உணர்வு ஆகியன நூதனமான சில உளவியல் உரசல்களுக்கு ஏதுவாயின. இவைஎல்லாம்புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழரின்உள்ளங்களை உலுப்பிய சங்கதிகள். இவற்றின் அடியாக எழுந்த புதுக்கவிதைகளையும் தனியானதோர் இயலிலே கமலரூபன் நோக்கியுள்ளார்.

......... கவிதைப் பொருளைப்பொறுத்தமட்டில் புலம் பெயர் கவிதைகளும் சிறப்புப் பெற்று நிற்கின்றனவே. ஆனாலும் கவித்துவம், அழகுணர்ச்சி என்று நோக்குகின்ற போது, இன்னும் வளரவேண்டிய நிலையிலேயே உள்ளன. மேற்காட்டியதே புலம்பெயர் புதுக்கவிதைகள் பற்றிக் கமலரூபன் கண்டு கூறியுள்ள கணிப்பீடாகும்.

### ஆய்வில் சிரத்தை

இவ்வாறெல்லாம் தாம் எடுத்துக் கொண்ட ஆய்வுப் பரப்பு முழுவதையும் இயலுமளவு சிரத்தையுடனும்இதய நேர்மையுடனும் நூலாசிரியர் பார்த்துள்ளார்.

திறனாய்வுத்துறையில் இவரது முயற்சி சென்றடைந்துள்ளஆழநீளங்கள் சிறியவை அல்ல. கமலரூபன் இப்பொழுதும் நம்மிடையேவாழ்ந்திருக்கக் கூடுமானால், அவர்மூலம் இன்னுமின்னும் சிறப்பான சாதனைகள் நடந்தேறி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக ஒருசிறுகுறிப்பு: கமலரூபனே தம்முடைய கைப்பட அச்சுப்பிழைகளைத் திருத்தக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லையேஎன்ற அங்கலாய்ப்பு நம் நெஞ்சங்களில் ஏழவே செய்கிறது.அந்த வாய்ப்புக் கிடைத்திருந்தால், அவர் தம் நூலில் இடம் பெற்ற மேற்கோட்பகுதிகளையும் பிறவற்றையும் செவ்வை பார்த்து, பரிபூரணமான புத்தகமொன்றை நமக்குத் தந்திருக்கக் கூடும்.

மறுபதிப்பாக இந்த நூலினை வெளியிடும் தருணத்தில் அச்சுப்பிழைகளைத் தவிர்ப்பது பற்றியும் கமலரூபனின் அபிமானிகள் கவனம் செலுத்த வேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### பகை

தனக்குத்தானே சுற்றம் தனக்குத்தானே பகை
- பகவத்கீதை

சித்தமெனும் பௌவத்
திரைகடலில் வாழ் துரும்பாய்
நித்தமலையாதருளில்
நிற்குநாள் எந்நாளோ.?

- தாயுமானவர்

மன்னே, என்மனத்தகத் தினின்று பகை என்னும் பாதகத்தைப் பறித்தெறிவாயாக!

பகையைக் கண்டு பிடித்து அதைக்களைவது முற்றிலும் அவசியம். உண்மையான பகை மனிதனுள் மறைந்திருந்து வேலை செய்கிறது. கட்டுக்கடங்காத மனதே ஒருவனுக்குப் பெரும்பகை. பின்பு புறத்தில் காணும் பகைகளையெல்லாம் அம்மனதே தேடிக் கொள்கிறது. மனிதன் அடையும் சிறுமைக்கும், சீர் கேட்டுக்கும் கட்டில் அடங்காத அவன் சிந்தையே முதற் காரணமாகும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# நேபாளத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் 35 பொலீசார் உட்பட 102 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தின் தென்மேற்குப் பகுதியில் மாஓ தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட தாக்குதலில் 35 பொலிஸார் உட்பட 102 பேர் கொல்லப்பட்டனர்.

மூவாயிரம் பேர் அடங்கிய தீவிரவாதிகள் சற்பரியா, லம்பி ஆகிய பொலிஸ். நிலையங்களை சுற்றி வளைத்துத் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதல் நேற்றுக் காலைவரை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். வேறொரு சந்தர்ப்பத்தில் தீவிரவாதிகள் பஸ் ஒன்றை தீயிட்டுக் கொழுத்தியதில் 6 பொது மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பங்களில் பலர் படுகாயம் அடைந்துள்ளதுடன் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களையும் தீவிரவாதிகள் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் இடம் பெற்ற இதே போன்ற ஒரு தாக்குதலில் 50 இராணுவத்தினர் உட்பட பொலிஸார், அரச அதிகாரிகள் என் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (து)

### முஸ்லிம்- மலையக...

பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி பிரதி அமைச்சர் முத்துலிங்கம் ஆர். யோகராஜன் எம்பி, தொழில் உறவு இயக்குனர் ஹரிச்சந்திரா ஆகியோரும் மலையக மக்கள் முன்னணி சார்பில் அமைச்சர் பி. சந்திரசேகரனும் எம். ராதாகிருஷ்ணன். மாகாணசபை உறுப்பினர் எம்.சிவலிங்கம் ஆகியோரும் நாளை ஞாயிற்றுக்கிழமை தலைவர் வே.பிரபாகரனை சந்திக்கவுள்ளனர். இச் சந்திப்பின்போது மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### பிரபாகரனைக்...

இந்தியாவிற்குக் கொண்டு வந்து நீதி மன்றத்தில் நிறுத்துவதுடன் அவரைக் கைது செய்வதற்காக இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் சட்டசபையில் தீர்மானம் கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார். (வ)

### விடுதலைப் புலி...

யாழ்ப்பாணம் திரும்பினர்.

இதேவேளை விடுதலைப் புலி உறுப்பினர்களை வரவேற்பதற்காக மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதியில் பொதுமக்கள் திரண்டிருந்த போதிலும் படையினர் புலிகளுக்கு அனுமதி வழங்காததனால் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.இதேவேளை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் யாழ் குடாநாட்டின் எப்பகுதியிலும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் நடமாட முடியும் எனவும், தீவுப் பகுதிக்குச் செல்வதைக் கடற்படையினர் தடுத்து நிறுத்தியமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலெனவும் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து புலிகளின் வன்னித் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. புலிகளின் தளபதிகளான இளம்பரிதி, பாப்பா மற்றும் தீவகப் பொறுப்பாளர் செம்மணல் (யோகன்) உட்பட 18 போராளிகள் தீவகம் சென்ற குழுவில் அடங்கியிருந்தனர். (ந)

## கலியுகம் 5104 வருடம்

## சித்திரபானு வருடப்பிறப்பு

**கலியுகம் 5104 வருடம் "சித்திர பானு" தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பு பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றது**

**வாக்கியப் பஞ்சாங்கக் கணிப்புப்படி**

விஷ" வருடம் பங்குனி மாதம் 30ம் திகதி சனிக்கிழமை பின்னிரவு 3.41 மணிக்கு பூர்வ பட்சத் துதியைத் திதியில், அச்சுவினி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் கும்ப லக்கினத்தில், சித்திரபானு வருடம் பிறக்கின்றது.

**திருக்கணிதப் பஞ்சாங்கப்படி -**

பங்குனி 30ந் திகதி சனிக்கிழமை பின்னிரவு 6.19 மணிக்கு பரணி நட்சத்திரத்தில் மீன லக்கினத்தில் சித்திரபானு வருடம் பிறக்கின்றது.

**புண்ணிய காலம்**

* வாக்கியமுறைப்படி சனி இரவு 11.41 மணி முதல் ஞாயிறு காலை 7.40 வரை

* திருக்கணிதப்படி சனி பின்னிரவு 2.19 மணிமுதல் ஞாயிறு பகல் 10.19 மணி வரை புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து விநாயகரை வழிபட்டு சுப காரியங்களை செய்தல் வேண்டும்.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

அச்சுவினி,பரணி, கார்த்திகை 1ம் கால், மகம், பூரம், உத்தரம், 2, 3, 4, கால்கள், அத்தம், சித்திரை 1,2 கால்கள், மூலம், பூராடம் இந்நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது அவசியமாகும்.

**கைவிசேடம்**

***வாக்கியம்***

14-04-2002 ஞாயிறு முற்பகல் 9.40 மணி முதல் 12.02 மணிவரை
14-04-2002 ஞாயிறு பிற்பகல் 12.14 மணிமுதல் 2.11 மணி வரை
14-04-2002 ஞாயிறு பிற்பகல் 2.22 மணிமுதல் 3.41 மணிவரை
(பழையநேரப்படி)

***திருக்கணிதம்***

14-04-2002 ஞாயிறு அதிகாலை 5.30 மணி முதல் 6.20 மணி வரை
15-04-2002 திங்கள் காலை 6.00 மணி முதல் 6.33 மணி வரை
17-04-2002 புதன் காலை 7.45 மணி முதல் 8.09 மணி வரை
(பழைய நேரப்படி)

## வாசுதேவ நாணயக்கார நேற்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார் இவருடன் பத்திரிகையாளர்கள் 10 பேர் வந்துள்ளனர்.

யாழ் வந்துள்ள வாசுவே நாணயக்கார இன்று காலை 10.30மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கு சென்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடவுள்ளார். (ந)


**புலமைப்பரிசில் - 2002**
**32வது பரீட்சையில் அதிக புள்ளி பெற்றோர்**

| | |
|---|---|
| வ.தனுஜன் (யா/இ.ஆ.பா) | 177 |
| நி.வாகினி | 167 |
| ஆ.அலெக்ஸ் உமாசங்கர் (யா/இ.ஆ.பா) | 158 |
| மோ.ஜனகன் (மானிப்பாய் விவேகானந்த வித்) | 158 |
| வி.மீருஜா (யா/இ.ஆ.பா) | 157 |
| தி.வைகுந்தன் | 156 |
| ஆ.யதுவரன் | 154 |
| உ.நிதர்சன் | 153 |
| ப.நர்த்தனன் | 152 |
| க.மயூரன் (கொ/இ.ஆ.பா) | 151 |

*33வது பரீட்சை சனி பி.ப 1.00 அல்லது ஞாயிறு தோற்றலாம்.*

(C/3955)

**BOND - யாழ்ப்பாணம்**


### விடுதலை...

அமெரிக்கத் தூதரகம் இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது இதேவேளை இலங்கை வரும் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் 17ம் திகதி புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)





**மில்க்வைற்**

கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541


### புலிகள் நேற்று...

முடியுமென்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தலை வழங்கியதாகவும் அவர்கள் கூறினர்.

மட்டு அம்பாறை - மாவட்டங்களில் 14 பேர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியுமென கண்காணிப்புக்குழு ஏற்கனவே அறிவித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மட்டக்களப்பு நகரிற்கான புலிகளின் பிரவேசத்தில் இழுபறி நிலை காணப்பட்டதுடன் 2 மணித்தியாலங்கள் தாமதமாகி நண்பகல் அளவிலேயே அவர்கள் மட்டக்களப்பு நகரை வந்தடைந்தனர். பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு, துணைப் பொறுப்பாளர் துரை உட்பட மட்டக்களப்பிற்கு வருகை தந்த விடுதலைப் புலிகளை விசேட அதிரடிப் படையின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பீவிமலசேன கைலாகு கொடுத்து வரவேற்றார்.

பின்னர் பட்டிருப்புச் சந்தியிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு புலிகள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். மட்டக்களப்பு நகரில் பிராந்திய அலுவலகம் நேற்று மாலையே திறந்து வைக்கப்பட்டது. (த)

### தமிழ்க் கூட்டமைப்பு...

பொன்னம்பலம் கஜேந்திரகுமார், அ.விநாயகமூர்த்தி, ஆர். சம்பந்தன், ஏ. தங்கவடிவேல், எம். சிவாஜிலிங்கம் ஆகியோர் வவுனியா ஊடாக வன்னி சென்றடைந்தனர். (வ)


## அறிவித்தல்

**மாநகரசபை, யாழ்ப்பாணம்**
**கட்டாக்காலி மிருகங்களைக் கட்டி வளர்த்தல்**

யாழ் மாநகர சபையின் நகர எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் கட்டாக்காலி ஆடு. மாடுகள். பொது இடங்களிலும் வீதிகளிலும் சேதங்களையும். விபத்துக்களையும் ஏற்படுத்த ஏதுவாக அமைவதைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகின்றது. ஆடு. மாடுகளை வீடுகளில் கட்டி வளர்ப்பதற்கு ஆவன செய்யுமாறும் இதனை மீறிக் கட்டாக்காலியாக அலையும் மிருகங்களைப் பிடிப்பதற்கும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 84(1). 84(2). 84(3). 85ன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைப் பொதுமக்கள் யாவரும் கருத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர். மாநகரசபை.
யாழ்ப்பாணம்.

(C/3956)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

**யாழ் மத்திய கால்லூரி**
**எதிர்**
**கொழும்பு சென் பீற்றேஸ் கல்லூரி**

**இடம் : சென் பற்றிக்ஸ் கல்லூரி**
**காலம் : 13-04-2002 பி.ப. 4.00 மணிக்கு**

சகலரையும் அன்புடன் அழைக்கிறோம்

**யாழ் மத்திய கல்லூரி** **அதிபர்**

(C/3950)

**கரிதாஸ் இலங்கை செடேக் அனுசரணையுடன் யாழ் மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக்)**

இணைந்து நடாத்தும்
அகில இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கான

**சமாதானத்துக்கான சுவரொட்டிப் போட்டி**

ஆண்டு 5 முதல் 11ம் ஆண்டு வரை

கரு : *"ஒப்புரவாகி சமாதானத்தில் ஒன்றிணைந்து பயணிப்போம்"*

அளவு : பிறிஸ்டல் போட் அளவு

எந்த வர்ணமும் பயன்படுத்தலாம்

*இறுதித் திகதி* 10-யூன்-2002

சிறந்த பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்

*அனுப்பவேண்டிய முகவரி :*

சுவரொட்டிப் போட்டி
இயக்குனர், மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக்)
மத்தியூஸ் வீதி, தியோகு வீதி
யாழ்ப்பாணம்.

(C/3948)

## நாகம்ஸ் சுன்னாகம்




நாளை முதல் இந்தியாவில் வெளியாகும் அன்றே நாகம்ஸ் சினிமாவிலும் டொப் ஸ்டார் பிரசாந், சிம்ரன் நடித்த

**தமிழ்**





இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.